பக்கம்: எட்டு
விலை ரூபா 5.00

பொதுசன நூலகம் யாழ்ப்பாணம்

# வலம்புரி
VALAMPURI

சங்கு 02 வள்ளுவர் ஆண்டு 2032 மாசி 2 புதன்கிழமை ( 14-02-2001 ) தொலைபேசி: 3378 ஒலி: 57

அழகிய தங்க நகைகளை
உங்கள் எண்ணம்போல்
தெரிவுசெய்திட
அர்ச்சனா
ஜுவலர்ஸ்
176/1, நாவலர் வீதி,
118, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.
(கி-1481)

## ● பிரிட்டனின் பயங்கரவாத தடைச் சட்டம்

# புலிகளைத் தடைசெய்யும் முடிவை உள்துறை அமைச்சரே எடுப்பார்

### தமிழ்க் கட்சிப் பிரதிநிதிகளிடம் பிரிட்டன் தூதரக செயலர் எடுத்துரைப்பு

(நமது நிருபர்)

பிரித்தானிய அரசாங்கம் கொண்டுவர உத்தேசித்துள்ள பயங்கரவாத தடைச் சட்டம் தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்பிற்கு மட்டும் பொருந்துவதாகவோ, அவர்களுக்காக மட்டும் உருவாக்கப்பட்டதோ அல்ல.

இச் சட்டம் பிரித்தானிய அரசு தயாரித்துள்ள பயங்கரவாத அமைப்புக்கள் அனைத்திற்கும் பொருந்துவதாக அமையும் என்று பிரித்தானிய தூதரகச் செயலாளர் தன்னைச் சந்தித்த பத்து தமிழ்க் கட்சிகளின் பிரதிநிதிகளிடம் தெரிவித்துள்ளார்.

இலங்கையில் நீண்டகால மாகத் தீர்த்து வைக்கப்படாமல் இருக்கும் இனப் பிரச்சினை தொடர்பாகநோர்வே அரசின் மத்தியஸ்தத்துடன் அரசும், விடுதலைப்புலிகளும் சமாதானப் பேச்சு வார்த்தையில் ஈடுபடுவதில் ஓரளவு வெற்றி கண்டு வரும் வேளையில் பிரிட்டிஷ் அரசு விடுதலைப் புலிகளைத் தடை செய்ய யோசிப்பது நோர்வேயின் சமாதான முயற்சிகளை பாதிக்கும் எனவே புலிகளை

→8ஆம் பக்கம் பார்க்க

## யுத்தத்தை நிறுத்தி பேச்சு நடத்துக ஆயர் மன்றத் தலைவர் கோரிக்கை

(கொழும்பு)

தற்பொழுது நாட்டில் இடம்பெற்று வரும் யுத்தத்தை நிறுத்தி சமாதானப்பேச்சுவார்த்தைகளை உடனடியாக ஆரம்பிக்குமாறு அரசாங்கத்தையும், விடுதலைப் புலிகளையும் கத்தோலிக்க ஆஜர் மன்றம் கோரியுள்ளது.

இது தொடர்பான செய்தியாளர்மாநாடு நேற்று கொழும்பிலுள்ள ஆயர்கள் இல்லத்தில் நடைபெற்றது.

ஆயர் மன்றத் தலைவரும் அனுராதபுர மறை மாவட்ட ஆயருமான அதி வணக்கத்துக்குரிய ஒஸ்வெல்ட் கோமிஸ் தலைமையில் நடைபெற்ற இச் செய்தியாளர் மாநாட்டில் அவர் மேலும் தெரிவிக்கையில்.

நாட்டில் அமைதிகளையும் சமாதானமும் வேண்டி ஒரு மாதகாலத்துக்கு வழிபாடுகளும் பிரார்த்தனைகளும் இடம்பெற ஏற்பாடு செய்

→8ஆம் பக்கம் பார்க்க

## புலிகளை தடைசெய்க ஜனஹன்ட் அமைப்பு பிரிட்டனுக்கு மகஜர்?

[கொழும்பு]

தமிழீழ விடுதலைப்புலிகள் இயக்கத்தை பிரித்தானியஅரசாங்கம் தடைசெய்யவேண்டுமெனக் கோரும் மகஜரொன்றை, வடக்கு கிழக்கின் எல்லைப்புற கிராமங்களைச் சேர்ந்த ''ஜனஹன்ட'' என்ற அமைப்பு பிரித்தானிய அரசுக்கு அனுப்பிவைக்கவுள்ளது.

இம் மகஜரை பிரித்தானிய அரசுக்குகையளிப்பதுதொடர்பாக கலந்தாலோசிக்க கொழும்பிலுள்ளபிரித்தானிய தூதுவரைச் சந்திக்க நேரம் ஒதுக்கிதருமாறு, கோரும் கடிதமொன்றை மேற்படி அமைப்பு கொழும்பிலுள்ள பிரித்தானிய தூதரகத்திற்கு அனுப்பியுள்ளது. (இ)

## சிவராத்திரி தினத்தில் வ.பி.போ.ச. பஸ்களிலேயே கீரிமலைக்கு செல்லமுடியும்

(யாழ்ப்பாணம்)

கீரிமலைச்சிவன் கோவிலில் எதிர்வரும்21ந்திகதி அனுஷ்டிக்கப்படவுள்ள சிவராத்திரி நிகழ்வில் கலந்துகொள்ளும் பக்தர்கள் அங்குசெல்வதற்கு வடபிராந்திய போக்குவரத்துச்சபையின் பேருந்தைத் தவிர வேறு எந்ததனியார் வாகனங்களையும் பயன்படுத்த அனுமதிவழங்கப்படமாட்டாது.

இவ்வாறு தெல்லிப்பழையில் இடம்பெற்றகலந்துரையாடலில் இராணுவஉயரதி

→8ஆம் பக்கம பார்க்க

## நல்லூர் மாணவனுக்கு ரூபா.50 ஆயிரம் நஷ்டஈடு உயர் நீதிமன்றம் தீர்ப்பு

சட்டவிரோதமாகக் கைது செய்யப்பட்டு சித்திரவதை செய்யப்பட்ட யாழ். மாணவர் ஒருவருககு ஐம்பதாயிரம் ரூபா நஷ்டஈடாக வழங்க வேண்டுமென்று கொழும்பு உயர்நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

நல்லூரைச்சேர்ந்த கணேசன் உஷாந்தன் என்ற மாணவன் இராணுவத்தினால் கைது செய்யபபட்டு சித்திரவதைக்குள்ளாக்கப்பட்டிருந்தார்.

இவரது கையில் எரிகாயங்களும், பிறப்பு உறுப்புக்களில்

→ 8ஆம் பக்கம் பார்க்க்

## 2002 முதல் க.பொ.த.(உ|த) விஞ்ஞான பாடம்ஆங்கிலத்தில்

(கொழும்பு)

நாடு முழுவதிலும் உள்ள பாடசாலைகளில் அடுத்த வருடம் முதல் க.பொ.த உயர் தர வகுப்பில் விஞ்ஞான பாடங்கள் யாவும ஆங்கில மொழி மூலப்கற்பிக்கப்படுமென கல்வி அமைச்சு தெரிவித்துள்ளது.

இவ்வாண்டு முதல் ஆங்கில மொழி மூலம கல்வி போதிக்கப்படுமென முன்னர் அறிவித்திருந்த பேதிலும் இது அடுத்த வருடத்திற்கு பிற்போடப்பட்டுள்ளது.

க.பொ.த. உயர்தர வகுப்பில் அடுத்த வருடம் முதல் ஆங்கில மொழி மூலம் கற்

→8ஆம் பக்கம் பார்க்க

## சமாதானத்தை வலியுறுத்தி மன்னாரில் பேரணி

சமாதானத்தை வலியுறுத்தியும், யுத்த நிறுத்தம் செய்யக்கோரியும் மன்னாரில் அரசியல்யாப்பு மன்றத்திற்கான பிரஜைகள் முன்னணி எதிர்வரும் சனிக்கிழமை ஆர்ப்பாட்டப்பேரணி ஒன்றை நடத்தவுள்ளது.

இந்த ஆர்ப்பாட்டப் பேரணியில் அரசியல் மன்றத்திகான பிரஜைகள் முன்னணி அமைப்பாளர் அஜீத் ரூபாசிங்ஹ மன்னார் ஆயர் அதி வண. இராயப்பு யோசப், ஆகியோர் கலந்துகொள்ளவுள்ளனர். (வ)

## மூன்று காலுடன் பிறந்த அதிசயக் குழந்தை

(வவுனியா)

மூன்று கால்களுடன்கூடிய அதிசயக் குழந்தை ஒன்று இராணுவக்கட்டுப்பாடற்ற வன்னிப்பகுதியில் அண்மையில் பிறந்துள்ளது' முள்ளியவளை மருத்துவமனையில் பிறந்தஇக்குழந்தை பிரசவித்த ஒருமணி நேரத்துக்குள் இறந்துவிட்டதாக வைத்தியசாலை அதிகாரிகள் தெரிவித்துள்ளனர். செம்மலைப் பகுதியைச்சேர்ந்த இளம்தாயே இக்குழந்தையை பிரசவித்தவராவர். இதே வேளை அண்மையில் வவுனியாவில் இருதலையுடன் குழந்தையொன்று பிறந்து இறந்தமையும் வாசகர்அறிந்ததே. (இ)

## குருநகர் களஞ்சிய வழக்கு யாழ். நீதிமன்றம் விசாரிப்பதற்கு மேன் முறையீட்டு நீதிமன்றம் தடை.

(கொழும்பு)

யாழ் செயலகத்தின் குருநகர்களஞ்சியத்தில் கடந்த ஆண்டுஜுன் மாதம் இடம்பெற்ற களவு தொடர்பான வழக்கையாழ் நீதிமன்றுவிசாரிப்பதை நிறுத்திவைக்குமாறு கொழும்பு மேல் முறையீட்டு நீதிமன்றம்தீர்ப்பளித்துள்ளது யாழ் நீதி மன்றம் குருநகர் களஞ்சிய வழக்கை விசாரிப்பதற்குக் தடை விதிக்குமாறு கோரி யாழ்செயலக களஞ்சிய பொறுப்பாளர் இராஜரட்ணம் கதிர்காமநாதன் நேற்று முன்தினம் கொழும்பு மேன் முறையீட்டு நீதி மன்றத்தில் மனுவொன்றைத்தாக்கல்செய்திருந்தார்.

இம் மனுவைவிசாரணைக்கு எடுத்துக்கொண்டமேன்முறையீட்டு நீதி மன்ற நீதியரசர் ராஜா பெனான்டோ, ஜெயவிக்கிரமஆகியோர் மேற்படி வழக்கை யாழ் நீதிமன்றத்தில் விசாரிப்பதற்த தடை உத்தரவு பிறப்பித்தனர்

கடந்த ஆண்டு ஜுன் மாதம் குருநகர் களஞ்சியம்

→ 8ஆம் பக்கம் பார்க்க)

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

### பல்கலைக்கழக மாணவர்கள்

# கலை, இலக்கிய, அரசியல்பணிகளை முன்னெடுக்க தடைவிதிக்கவில்லை

## படிப்பில் அதிக கவனம் தேவையென உபவேந்தர் அறிவுரை

(தென்மராட்சி)

யாழ்ப்பாணப் பல்கலைக் கழகத்தில் கல்வி பயில்கின்ற மாணவர்கள் கலை, இலக்கிய, சமூக மற்றும் அரசியல் பணிகளை முன்னெடுப்பதற்கு நாம் தடையில்லை.

ஆனால் வகுப்பு நேரம். படிப்புக்கு முக்கியத்துவம் கொடுக்க வேண்டும். வேலைநேரம்என்றால்வேலை நேரமாக இருக்க வேண்டும்க விஞ்ஞான பீடமாணவர்களின் கற்கை நெறிகளை மிகவும் கவர்ச்சிகரமானதாக மாற்றவேண்டும். அதில் நிறைய மாற்றங்கள் செய்ய வேண்டியுள்ளது. இதற்கு விஞ்ஞான பீட மாணவர்களும், ஆசிரியர்களும் ஒத்துழைப்பு நல்க வேண்டும்.

இவ்வாறு யாழ்ப்பாணம் பல்கலைக் கழகத்தின் உபவேந்தர் பேராசிரியர் பொ. பாலசுந்தரம்பிள்ளை நேற்று முன்தினம் யாழ் பல்கலைக் கழக விஞ்ஞான பீடமாணவ ஒன்றியத்தின் வருடாந்த வெளியீடான 'சக்கரம்' இதழ் வெளியீட்டு விழாவின் போது பிரதம விருந்தினராகப் பங்கு கொண்டு உரையாற்றும் போது குறிப்பிட்டார்.

விஞ்ஞான பீடமாணவ ஒன்றியத்தின் தலைவர் செல்வன். சு. சுதாகரன் தலைமையில் நடைபெற்ற இவ் வெளியீட்டு விழாவில் ஒன்றியத்தின் உபதலைவர் செல்வன். இ. கிருஸ்ணதாஸ் வரவேற்புரையை நிகழ்த்தினார். உபவேந்தர் பாலசுந்தரம்பிள்ளை அங்கு தொடர்ந்து பேசுகையில்,

இலங்கையில் இருக்கின்ற 13 பல்கலைக் கழகங்களில் பாடம்சார்ந்துபீடம்சார்ந்து. யாழ்ப்பாணப் பல்கலைக் கழகம் தான் கூடுதலான வெளியீடுகளை வெளியிடுகின்றது. பேராதனை, மற்றும் கொழும்பு பல்கலைக் கழகங்களில் கூட, எம்மைப் போன்று வெளியீடுகளை வெளியிடுவதில்லை.

அதேமாதிரி எமது ஆசிரியர்களும் கூட பல்வேறு நூல்களை வெளியிட்டுள்ளனர். இந்தக் காலகட்டத்தில் விஞ்ஞான பீடமாணவர்களால் 'சக்கரம்' எனும் சஞ்சிகை வெளிவருவது குறித்து நாம் மகிழ்ச்சி அடையாமல் இருக்க முடியாது.

மாணவப் பருவத்தில் தரமோ தரமில்லையோ, சிறிதோ பெரிதோ அவர்கள் எழுதுகின்ற ஆக்கங்களால் அவர்களது ஆசையும் உத்வேகமும் கூடிக் கொள்கிறது.

இதனால் மாணவன் மென்மேலும் உற்சாகமடைகின்றான். அத்தகைய துறையில் தொடர்ந்து ஈடுபடவிரும்புவான்.

மேலும் வெளியீடுகளைப் பொறுத்த வரையில் நாம் நல்ல நிலையில் இருக்கின்றோம். எனவே மேலும் மேலும் வளர்வதற்கு வாய்ப்புகள் உண்டு. சந்தர்ப்பத்தை நாம் பயன்படுத்த வேண்டும். மாணவர்கள் தம் கல்விச் செயற்பாட்டுக்கு குந்தகம் விளைவிக்காமல், இடையூறு ஏற்படுத்தாமல சகலவற்றையும் முன்னெடுக்கலாம் என்றார்.

சிறப்பு விருந்தினராகப் பங்கு கொண்ட விஞ்ஞான பீட பீடாதிபதி பேராசிரியர் இ. குமாரவடிவேல் அங்கு வாழ்த்துரை வழங்கும் போது

எமது மனித சமுதாயத்தில் மாபெரும் கண்டு பிடிப்புக்களில் மிக முக்கியமானது சக்கரம். அந்தச் சக்கரம் கண்டு பிடிக்கப்பட்ட பின்புதான் எமது கலை கலாசார பண்பாடுகள் மிக வேகமாக வளர்ந்தன.

இச் சக்கரம் போல எமது மாணவர்களும் ஓய்வின்றிச் சுழன்று உழைத்து எமது சமூகத்தை இயக்கமுள்ள சமூகமாக வைத்திருக்க வேண்டும்.

இந்த வகையில் திறமையும் ஆற்றலும் மிக்க விஞ்ஞான பீட மாணவர்கள் நாளைய சமுதாயச் சிற்பிகளாக மாறுவார்கள் என்பதில் சந்தேகமில்லை எனக் குறிப்பிட்டார்.

(உ-17)

## முன்மாதிரியான விளையாட்டுப் போட்டி

(யாழ்ப்பாணம்)

வீண் கால விரயத்தையும் பண விரயத்தினையும் தடுக்கும் நோக்கில் இரு பாடசாலைகளின் விளையாட்டுப் போட்டிகளை ஒரே இடத்தில் ஒரே தினத்தில் நடத்தும்முன் மாதிரியான செயற்பாடுகளில் பாடசாலைகள் சில ஈடுபட்டு வருகின்றன.

இந்த வகையில் அருகருகே இயங்கி வரும் மானிப்பாய் இந்துக் கல்லூரியும் மானிப்பாய் மகளிர் கல்லூரியும் இணைந்து விளையாட்டுப் போட்டிகளை ஒரே நாளில் ஒரே மைதானத்தில் நடத்தத் திட்டமிட்டுள்ளன.

(உ-2)

# பயண அனுமதி வழங்கப்பட்டோர் விபரம்

பெப் மாதம்13 - ஆம் திகதி வெளியிடப்பட்ட பட்டியலின் படி, வெளிமாவட்டங்களுக்குப் பயணம் செய்ய அனுமதி வழங்கப் பட்டவர்களின் இலக்கங்கள் பிரதேச செயலக ரீதியாகத் தரப்படுகின்றன.

### சங்கானை

| | |
|---|---|
| 178737 ஏ | 178737 பி |
| 181636 ஏ | 181636 பி |
| 182588 ஏ | 182718 ஏ |
| 182718 பி | |

### சாவகச்சேரி

| | |
|---|---|
| 160013 ஏ | 160013 பி |
| 18433 ஏ | 180433 பி |
| 180433 சி | 180565 ஏ |
| 180565 பி | |

### யாழ்ப்பாணம்

| | |
|---|---|
| 175585 ஏ | 178395 ஏ |
| 178395 பி | 178431 ஏ |
| 178485 ஏ | 180010 ஏ |
| 180010 பி | 180010 சி |
| 180109 ஏ | 180187 ஏ |
| 180187 பி | 180187 சி |
| 181702 ஏ | 181907 ஏ |
| 181940 ஏ | 181941 ஏ |
| 181942 ஏ | 181965 ஏ |
| 181969 ஏ | 181969 பி |
| 182003 ஏ | 182038 ஏ |
| 182112 ஏ | 182112 பி |
| 182112 சி | 182112 டி |
| 182112 ஈ | 182112 எவ் |
| 182138 ஏ | 182138 பி |
| 182178 ஏ | 182178 பி |
| 182178 சி | 182194 ஏ |
| 182194 பி | 182194 சி |

### கரவெட்டி

| | |
|---|---|
| 155841 ஏ | 158020 ஏ |
| 158020 பி | 158020 சி |
| 158020 டி | 158020 ஈ |
| 162340 ஏ | 164493 ஏ |
| 164493 பி | 164493 சி |
| 165332 ஏ | 165332 பி |
| 169572 ஏ | 169572 பி |
| 169572 சி | 169572 டி |
| 169572 ஈ | 169657 ஏ |
| 169657 பி | 169749 ஏ |
| 169749 பி | 172407 ஏ |
| 172407 பி | 172574 ஏ |
| 172574 பி | 172574 சி |
| 172598 ஏ | 172598 பி |
| 174328 ஏ | 174328 பி |
| 174328 சி | 176218 ஏ |
| 176223 ஏ | 176223 பி |
| 176270 ஏ | 176270 பி |

| | |
|---|---|
| 179270 சி | 176328 ஏ |
| 176378 பி | 176499 ஏ |
| 176499 பி | 177642 ஏ |
| 177732 ஏ | 177738 பி |
| 177759 ஏ | 177759 பி |
| 177759 சி | 177869 ஏ |
| 177869 பி | 1777869 சி |
| 177901 ஏ | 17790ı பி |
| 177901 சி | 177903 ஏ |
| 177968 ஏ | 177968 பி |
| 177968 சி | 177968 டி |
| 177968 ஈ | 177968 எல் |
| 177968 ஜி | 180393 ஏ |
| 180393 பி | 180441 ஏ |
| 180441 பி | 180441 சி |
| 180441 டி | 180441 ஈ |
| 180454 ஏ | 180457 ஏ |
| 180471 ஏ | 180471 பி |
| 180515 ஏ | 180515 பி |
| 180530 ஏ | 180531 ஏ |
| 180531 பி | 180550 ஏ |
| 180550 பி | 180550 சி |
| 180554 ஏ | 180575 ஏ |
| 180578 ஏ | 181074 ஏ |
| 181075 ஏ | 181075 பி |
| 181075 சி | 181094 ஏ |
| 181176 ஏ | 181177 ஏ |
| 181177 பி | 181223 ஏ |
| 181250 ஏ | 181250 பி |
| 181256 ஏ | 181256 பி |
| 181280 ஏ | 181300 ஏ |
| 181329 ஏ | 181329 பி |
| 181336 ஏ | 181346 ஏ |
| 181394 ஏ | 181394 பி |
| 181398 ஏ | 182210 ஏ |
| 182222 ஏ | 182224 ஏ |
| 182224 பி | 182224 சி |
| 182224 டி | 182227 ஏ |
| 182227 பி | 182229 ஏ |
| 182283 ஏ | 182283 பி |
| 182296 ஏ | 182297 ஏ |
| 182298 ஏ | 182325 ஏ |
| 182378 ஏ | 182477 ஏ |
| 182477 பி | 182477 சி |

### நல்லூர்

| | |
|---|---|
| 181708 ஏ | 181709 ஏ |
| 181901 ஏ | 174989 ஏ |
| 179243 ஏ | 179243 பி |
| 179328 ஏ | 181661 ஏ |
| 181661 பி | 181687 ஏ |
| 182717 ஏ | |

### பளை

180438 ஏ

(தொடரும்)

### 27 ஆம் திகதிவரை

# விளக்க மறியலில் வைக்க நீதிபதி உத்தரவு

(யாழ்ப்பாணம்)

பயங்கரவாத தடைச் சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்ட 7பேர் நேற்று யாழ் நீதி மன்றில் ஆஜர் செய்யப்பட்ட போது, அவர்களை மீண்டும் 27 ஆம் திகதி வரை விளக்க மறியலில் வைக்குமாறு நீதிபதி உத்தரவிட்டார்.

இராஜமனோகரன், தயாகரன் (கோண்டாவில்), செல்வராஜா மணிவண்ணன் (யாழ்ப்பாணம்), சின்னத்துரை விஜயரூபன் (உரும்பிராய்), நாகலிங்கம் ஜேசுதாஸ் (கொடிகாமம்), வலலிபுரம் கருணாகரன் (மிருசுவில்), காத்திகேசு சுசிந்தன் (கொக்குவில்), நடராசா சொர்ணலிங்கம் ஆகியோரையே விளக்க மறியலில் வைக்குமாறு உத்தரவிடப்பட்டுள்ளது. (உ-12)


## 31 ஆவது நாள் நினைவஞ்சலி

### கணபதிப்பிள்ளை பொன்னுத்துரை

தோற்றம்: 01 ↓ 11 ↓ 1939



மறைவு 15 ↓ 01 ↓ 2001

அமுத நிலாத் திருமுகமும் நுதலில் நீறும்
அன்பு மொழி என்னாளும் அவரின் வாயில்
குமுதமலரன்ன வெள்ளைப் பற்கள் தோன்ற
கோதிலாப் புன் சிரிப்பும் நீள் கரமும்
எமதண்ணல் இறையெண்ணும் இனிமை நெஞ்சும்
தமதென்று எண்ணாமல் இரந்தோர்க்கியும்
தண்ணளியான் பொன்னுத்துரை! ஐயாவே!

14-02-2001 புதன்கிழமை அன்று இல்லத்தில் நடைபெறும் வீட்டுக்கிருந்தியத்திலும் பகல் போஷனத்திலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

மனைவி, மக்கள், மருமக்கள்,
சகோதரர்கள்,

ஐயனார் கோவிலடி,
வண்ணார்பண்ணை,
யாழ்ப்பாணம்.

(கி-1485)


### திருக்கேதீஸ்வர ஆலயத்தினை

# யுத்த சூனியப் பிரதேசமாக்க பாதுகாப்பு அமைச்சுடன் பேச்சு

## அமைச்சர் டக்ளஸ் ஏற்பாட்டில்

(யாழ்ப்பாணம்)

மன்னார், திருக்கேதீஸ்வர ஆலயத்தினை யுத்த சூனிய பிரதேசமாகச் செய்து, திருப்பணிச் சபையினரிடம் மீள ஒப்படைப்பதற்கு ஏதுவாக பாதுகாப்பு அமைச்சுடன் பேச்சு நடத்த ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதாக அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தெரிவித்துள்ளார்.

ஆலயத் திருப்பணிச்சபை உறுப்பினர்கள் மற்றும் ஆலய மதகுருமார்கள் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவைச் சந்தித்துத் திருக்கேதீஸ்வர ஆலய சுற்றாடலைத் திருப்பணிச் சபையினரிடம் கையளிக்க நடவடிக்கை எடுக்கும்படி விடுத்த வேண்டுகோளை யடுத்து பாதுகாப்பு அமைச்சுடனான இச்சந்திப்பு ஏற்பாடாகியுள்ளது.

ஆலய திருப்பணிச்சபை உறுப்பினர்களும் கலந்து கொள்ளவுள்ள பாதுகாப்பு அமைச்சுடனான சந்திப்பில், தற்போது இராணுவத்தினரின் பொறுப்பிலுள்ள ஆலய வளாகம் திருப்பணிச் சபையிடம் மீள ஒப்படைக்கப்படுதல், ஆலய வழிபாட்டினை மீள ஆரம்பித்தல், ஆலய வழிபாட்டில் பக்தர்கள் கலந்து கொள்ளல் என்பவற்றிற்கு சகல தரப்பினரும் ஒத்துழைப்பு நல்க வேண்டும்.

ஆலய சூழலில் ஆயுதங்களுடன் நடமாடவோ, ஆயுதங்களைப் பிரயோகிக்கவோ இடமளிக்காது அமைதிப் பிரதேசமாக இருக்க வேண்டும். ஆகிய கோரிக்கைகளை முன் வைத்துப் பேச்சு நடத்தப்பட உள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளை ஆலயத்திலிருந்து சுமார் மூன்று கிலோ மீற்றர் தூரத்தில் இராணுவத்தினர் தங்கள் பாதுகாப்பு முன்னரங்க நிலைகளைப் பேணுவதில் தங்களுக்கு ஆட்சேபம் எதுவும் இல்லை என ஆலய திருப்பணிச் சபையினர் தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

ஆலய சூழல் வெகு விரைவில் யுத்த சூனியப் பிரதேசமாகப் பிரகடனம் செய்யப்பட்டு, கும்பாபிஷேகம் நடத்தப்பட்டு பக்தர்கள் வழிபாட்டினை மீள ஆரம்பிப்பதற்கும் ஆலயத்தினைச் சுற்றிவரவுள்ள சேதமடைந்த மடங்களைத் திருத்தியமைக்கவும் நடவடிக்கை எடுப்பதாகவும் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தெரிவித்துள்ளார்.

ஆலயச் சூழலில் யுத்த நடவடிக்கையின் போது இடம்பெயர்ந்து வாழ்கின்ற சுமார் மூவாயிரம் குடும்பங்களை அங்கு மீளக்குடியேற்ற நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டும் எனவும் அமைச்சரிடம் திருப்பணிச் சபையினர் வேண்டுகோள் விடுத்துள்ளனர். [உ]

### புனிதமான...

7ஆம் பக்கத் தொடர்ச்சி)

அனுமதிப்பதேயாகும்'.

என எந்த இதயம் சொல்லிக் கொள்ளுமோ அங்கேதான் உண்மையான காதல் ஊற்றெடுத்து நிற்கின்றது.

**கண்ணீரில் மூழ்குதல்**

தன் சுயநலம் பாராது எதையுமே காதலன் அல்லது காதலியின் சந்தோஷமான வாழ்வுக்கென்றே செய்வதே உண்மையான காதல்.

ஆனாலும் எங்கள் கலாசார வெளிகளினுள்ளே பல வேளைகளில் கண்களில் ஆரம்பிக்கும் காதல் கண்ணீரிலே மூழ்கிச் செத்துப் போகிறது.

ஆனால் மாறாக இந்தக் காதல் எனும் புனித உறவு கண்களில் தொடங்கி கண்ணீரிலோ, கல்யாணத்திலோ முடிந்து விடாது. காலங்களைக் கடந்து களங்கமற்று வாழ வேண்டும் என்பதையே இன்றைய காதலர் தினம் எமக்குக் கூறி நிற்கின்றது.

## இராணுவக் கட்டுப்பாடற்ற வன்னிப் பகுதியில்
# தொடர்கதையாகும் பொருளாதாரத் தடை
# பஞ்சம் பசி பட்டினியால் மக்கள் வாட்டம்

## நேரில் சென்றவர் தகவல்

(ஈச்சமோட்டை)

கிளிநொச்சி மாவட்டத்தில் வாழும் இடம்பெயர்ந்த மக்களுக்கான நிவாரண வெட்டு, பொருட்களின் விலையேற்றம், சுகாதார வசதிகளின்மைபோக்குவரத்து சிக்கல் போன்ற பல்வேறு காரணங்களினால் மக்களின் இயல்பு வாழ்க்கை பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளதை நேரிலே காண முடிவதாக அண்மையில் வன்னியின் இராணுவக் கட்டுப்பாடற்ற பகுதிக்கு சென்று திரும்பிய மனித முன்னேற்ற நடுநிலைய அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

அவர் மேலும் தான் கண்டுணர்ந்தவற்றை விபரிக்கையில்,

கிளிநொச்சி மாவட்டத்தில் ஒரு லட்சத்து 35 ஆயிரம் மக்கள் வசித்து வருகின்றனர். இவர்களில் 90 ஆயிரம் பேர் இடம்பெயர்ந்து வாழும் மக்களாவர்.

இதில் 26 ஆயிரத்து 200 குடும்பங்கள் உலர் உணவு நிவாரணம் பெறும் தகுதி பெற்றுள்ள போதும் 14 ஆயிரத்து 500 குடும்பங்களுக்கே நிவாரணம் வழங்கப்பட்டு வந்தது.

இந்த அளவு, கடந்த ஆண்டு மே மாதம் முதல் 8 ஆயிரத்து 600 ஆகக் குறைக்கப்பட்டுள்ளது.

இதனால் வறுமைக்கோட்டுக்கு கீழ் வாழும் இடம்பெயர்ந்த குடும்பங்கள் பட்டினியால் வாடுகின்றன.

இரண்டாயிரமாம் ஆண்டு மே மாதம் முதல் இவ்ஆண்டு முற்பகுதி வரை, அப்பகுதிக்கு 520 மண்ணெண்ணை பரல்களே அனுப்பி வைக்கப்பட்டுள்ளன.

இதனால்மண்ணெண்ணை ஒரு லீற்றர் 150 ரூபா வரை விற்பனையாவதோடு மூன்று தீக்குச்சிகள் ஒரு ரூபாவாக விற்கப்படுகின்றன

அப்பகுதியின் அரச அதிபர் 4 ஆயிரத்து 200 மெற்றிக் தொன் உரம் உடனடியாக விவசாய நடவடிக்கைகளுக்கு தேவை என கோரியிருந்த போதிலும் ஆயிரத்து 100 மெற்றிக்தொன்உரம் எடுத்து வரவே அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

இதிலும் வவுனியாப்பகுதி பாதுகாப்பு தரப்பினரால் 400 மெற்றிக் தொன் உர வகைகளே எடுத்துவர அனுமதிக்கப்பட்டுள்ளது.

இதனால் அப்பகுதி விவசாய நடவடிக்கைகள் பெரிதும் பாதிப்படைந்துள்ளன.

கிளிநொச்சி அக்கராயனில் இயங்கும் வைத்தியசாலையில் இரண்டு வைத்தியர்களும் எட்டு பிரசவ தாதிமாரும் ஒன்பது தாதிமாருமே கடமையாற்றுகின்றனர்.

அத்துடன் இரத்த வங்கிச் சேவை, சத்திரசிகிச்சை போன்றவை எதுவும் நடைபெறுவதில்லை.

இதனால் அப்பகுதி மக்கள் பெரும் சுகாதார வசதியீனங்களை எதிர்நோக்கியுள்ளனர்.

கல்விச் செயற்பாடுகளிலும் கிளிநொச்சி மாவட்டம் பெரும் பாதிப்பை எதிர்நோக்கியுள்ளது.

மாணவர்கள் போஷாக்கின்மையால் கற்றல் செயற்பாட்டில் மந்த நிலையில் உள்ளதோடு ஆயிரத்து 600 ஆசிரியர்கள் தேவையான இடத்திற்கு 600 ஆசிரியர்களே பெரும் கஷ்டங்களின் மத்தியில் சேவையாற்றி வருகின்றனர் எனவும் தெரிவித்தார். (உ-59)

## பாலியல் நோய்
# கட்டுப்பாட்டு பிரசுரங்கள் எடுத்து வரப்பட்டன

(யாழ்ப்பாணம்)

''பாலியல் நோய் கட்டுப்பாடு'' சம்பந்தமான பிரசுரங்கள் கொழும்பில் இருந்து எடுத்து வரப்பட்டுள்ளன.

அண்மையில் கொழும்பில் நடைபெற்ற பாலியல் நோய்கள் கட்டுப்பாட்டு நிகழ்ச்சித்திட்ட மகாநாட்டில் பங்குபற்றி யாழ்- திரும்பியுள்ள பொதுச் சுகாதாரப் பரிசோதகர் கு. நக்கீரன் இவற்றை எடுத்து வந்துள்ளார்.

பல நூற்றுக்கணக்கான பாலியல் நோய்கள் சம்பந்தமான பிரசுரங்கள், சுவரொட்டிகள், கைந்நூல்கள் என்பன இவற்றில் அடங்கும்.

இவற்றைப் பெற்றுக் கொள்ள விரும்பும் பாடசாலைகள், சனசமூக நிலையங்கள் உட்பட ஏனைய நிறுவனங்கள் யாழ் போதனா வைத்தியசாலை அறை இலக்கம் 33 இல் தொடர்பு கொண்டு இவற்றைப் பெற்றுக் கொள்ள முடியுமெனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (உ-104)

# விமானத்தில் பழுது விசாரிக்க ஆணைக்குழு

(கொழும்பு)

லண்டனுக்கான சிறிலங்காவின் எயார்லைன்ஸ் விமானத்தில் பழுது ஏற்பட்டமை தொடர்பாக விசாரணை செய்யும் முகமாக விசாரணை ஆணைக்குழு ஒன்று அமைக்கப்பட்டுள்ளது

அண்மையில் விமானம் புறப்பட்டு 3 மணி நேரத்தின்பின் தரையிறக்கப்பட்டு விமானச்சக்கரங்களில் ஒன்று உடைந்துவிட்டதாக பயணிகளுக்கு காரணம் தெரிவிக்கப்பட்டது.

இதன் காரணமாக 8 மணி நேரதாமதத்தின் பின்பே இவ்விமானம லண்டன் சென்றடைந்தது. இந்த விமானத்திற்கு என்ன நேர்ந்தது என்று அறிய விசேட விசாரணை ஆணைக்குழு ஒன்று அமைக்கப்பட்டுள்ளது. (உ-7)

# கற்றலில் ஆர்வம் குன்றிய தென்மராட்சி மாணவர்

(துன்னாலை)

தென்மராட்சியில் இருந்து இடம்பெயர்ந்து வடமராட்சிப்பகுதி தனியார் கல்வி நிறுவனங்களில் இயங்கிவரும் பாடசாலைகளின் மாணவர்கள் தொடர்ந்தும் சிரமங்களை எதிர்நோக்கி வருவதாக கூறப்படுகிறது.

இம் மாணவர்கள் கற்பதற்கு வேண்டிய உபகரணங்கள் போதியளவில் இல்லாதிருப்பதுடன், இட வசதியோ அன்றி இருப்பிடவசதியோ இல்லாதநிலை தொடர்ந்தும் நீடிக்கிறது.

அத்துடன் அவர்கள் மேலதிக விளையாட்டு பயிற்சிகள் மேற்கொள்வதற்கும் வழிவகைகள் கிடையாது.

இந் நிலைமைகளால் மேற்படி மாணவர்கள் கற்றல் செயற்பாடுகளில் ஆர்வம் குன்றிக் காணப்படுவதாக கூறப்படுகிறது. (உ-41)

## மாகாணசபைகளின்
# நிர்வாகத்தின் கீழ் பேருந்து நிலையங்கள்

(கொழும்பு)

நாட்டில் உள்ள சகல பிரதான பஸ் நிலையங்களையும் மாகாண சபைகளின் கீழ் கொண்டுவருவது என தீர்மானிக்கப்பட்டுள்ளது.

மாகாண சபைகளின் போக்குவரத்து அமைச்சர்களை சந்தித்த வேளை அமைச்சர் தினேஸ் குணவர்த்தன தலைமையில் மேற்கண்ட தீர்மானம் எடுக்கப்பட்டது.

அத்துடன் இச்சந்திப்பின் போது போக்குவரத்துச் சேவைகளைச் சீர் செய்வது தொடர்பான பல்வேறு தீர்மானங்களும் எடுக்கப்பட்டுள்ளன. [உ-4]

# யாழ். - தீவக சிற்றூர்தி சேவைகள் சீரில்லை

(மண்டைதீவு)

யாழ்ப்பாணத்திற்கும்தீவகத்திற்கும் இடையேயான சிற்றூர்தி சேவைகள் மிகவும் குறைவாகவே இடம்பெறுவதாக அப்பகுதி பொதுமக்களால் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கடந்த 1990 ஆம் ஆண்டுகளுக்கு முன்னைய காலங்களில் 20 நிமிடம் அல்லது அரை மணிக்கு ஒன்று என்ற வீதத்தில் சிற்றூர்தி சேவைகள் நடைபெற்ற போதிலும், தற்போது நாளுக்கு ஒன்று அல்லது இரண்டு சேவைகளே இடம்பெற்று வருகின்றன.

இதன் காரணமாக இப்பகுதி மக்கள் தமது யாழ்ப்பாணம் தீவகம் இடையேயான பயணத்திற்கென பேருந்து சேவையை மட்டுமே நம்பியுள்ள நிலை காணப்படுகிறது.

இதேசமயம், பேருந்து சேவைகள் ஒன்று அல்லது ஒன்றரை மணி நேரஇடை வெளியில் இடம்பெறுவதும் குறிப்பிடத்தக்கது. (உ-11

## இரு சிறுவர்களை
# கானான் ஆச்சிரமத்தில் சேர்க்க உத்தரவு

(ஓட்டுமடம்)

பொம்மை வெளிப் பகுதியில் திருட்டுச் சம்பவங்களில் ஈடுபட்டு வந்ததாக கூறப்படும் இரு சிறுவர்களை மன்றில் ஆஜர் செய்யப்பட்ட போது இருபாலை கானான் ஆச்சிரமத்தில் சேர்ப்பிக்குமாறு யாழ் மாவட்ட நீதிபதி உத்தரவிட்டார்.

மேற்படி இரு சிறுவர்களும் தமது தவறைஒத்துக் கொண்டதுடன் பெற்றாரின் பராமரிப்பில் இல்லாத காரணத்தால் இத் தொழிலில் ஈடுபட்டதாக தெரிவித்துள்ளனர். (உ-121)

# பாதிப்புக்குள்ளான நிலையில் முல்லைமாவட்டமருத்துவசேவைகள்

(ஈச்சமோட்டை)

முல்லைத்தீவு மாவட்டத்தில் மருத்துவ சேவைகள் மிகவும் பாதிப்புக்குள்ளான நிலையில் காணப்படுவதாக வன்னித் தகவல்கள் தெரிவிக்கின்றன.

இங்கு ஒன்பது பொதுசுகாதார பரிசோதகர்கள் கடமையாற்ற வேண்டிய தேவை இருக்கின்ற போதிலும் இருவர் மட்டுமே கடமை புரிகின்றதுடன்,

இரு பதிவு செய்யப்பட்ட மருத்துவ உத்தியோகத்தர் [ஆர்.எம்.பி] மாத்திரமே சேவையிலுள்ளனர்.

இது தவிர,இம் மாவட்டத்தில மருந்துக் கலவையாளர்களாக கடமையாற்ற தகுதி வாய்ந்த எவரும் நியமிக்கப்படவில்லை.

இவை தவிர சுகாதார மருத்துவ அதிகாரி அலுவலகத்திற்கென தனியான கட்டடம் ஏதும் இல்லாததுடன், மருந்துப் பொருட்களைப் பாதுகாப்பதற்கு குளிர்சாதனப் பெட்டி வசதிகளும் அறவே கிடையாத நிலைமை காணப்படுகிறது. (உ-59)

## மாணவன் காயம்

(யாழ்ப்பாணம்)

யா/கொக்குவில் இந்துக் கல்லூரி மாணவன் வடிவேல் பிரசாத், இல்லமெய் வல்லுநர் போட்டியை முன்னிட்டு தடைதாண்டல் பயிற்சியில் ஈடுபட்டிருந்த வேளை, இடதுகை மணிக் கட்டுப் பகுதியில் காயமடைந்து யாழ் போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். (உ-02)

# தேடுவாரற்ற நிலையில் வீதி செப்பனிடும் உருளை

வீதி அபிவிருத்தி அதிகார சபையின் பாவனையில் இருந்த வீதி செப்பனிடும் உருளை ஒன்று ஊர்காவற்றுறை கண்ணகை அம்மன் துறைமுகக் கடலில் வீழ்ந்து கிடப்பதைக்காண முடிகிறது

பல ஆயிரம் ரூபா பெறுமதியான இவ் உருளையை மீட்பதற்கான எதுவித முயற்சிகளும் இதுவரை மேற்கொள்ளப்படவில்லை. உ-11)

# யா-மாவட்ட செயலகத்தில் நிலக் கீழ் அறை

யாழ்- மாவட்ட செயலகத்திற்கென நிலக்கீழ் அறையொன்று அமைக்கும்பணிகள் துரிதமாக இடம் பெற்று வருவதாக சம்பந்தப்பட்ட அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

30 இலட்சம் ரூபா செலவில் அமைக்கப்படும் இவ்வறை முக்கியமான பல ஆவணங்களை பேணிப் பாதுகாப்பதற்கென அமைக்கப்படுவது குறிப்பிடத்தக்கது. (உ-2)

## இராசி பலன்

14-02-2001
(மாசி 02, புதன்)
சப்தமி பி இ 2 49 வரை
சுவாதி பி இ 3 14 வரை
இராகு காலம் 12.33 - 2 03
சுபநேரம் 5.03 - 6 33
சித்தம்.

**மேடம்**
வாகன வசதி, விருந்துபசாரம், உல்லாசம், காரியம் கைகூடும்.

**இடபம்**
காரிய ஜெயம், புதிய முயற்சி, சத்துரு ஜெயம், உடல் நலம்.

**மிதுனம்**
சோகமான நிலை. காரிய இடைஞ்சல். வியாதி, கௌரவக் குறைவு.

**கடகம்**
உறவினர்வெறுப்பு, பயந்த சுபாவம், சுகக் குறைவு, முயற்சி தாமதம்.

**சிங்கம்**
பிரயாணம், சகோதரர் உதவி, காரிய சித்தி, அன்னியர் நன்மை.

**கன்னி**
மதிப்புக் குறைவு, வீண் செலவு, வாக்குக் கலகம், முயற்சி தாமதம்.

**துலாம்**
ஆழ்ந்த சிந்தனை, செல்வாக்கு, நல்லஉணவு கிடைத்தல், காரியம் கைகூடும்.

**விருச்சிகம்**
அலைச்சல், நிலைக்கேடு. கலகம், பிரயாணம்.

**தனுசு**
நினைத்த காரியம் கைகூடும், தன இலாபம், அரச நன்மை, மன மகிழ்ச்சி.

**மகரம்**
பிறர் உதவி, முயற்சி கைகூடும், தொழில் விருத்தி மேன்மை

**கும்பம்**
பிரயாணம், அமைதிக் குறைவு, கட்டுப்பாடு, உஷ்ண நிலை.

**மீனம்**
வியாதிஏற்படல், பிரயாண பயம், வீண் பிரச்சினை, காரியத் தடங்கல்.

(பழைய நேரப்படி கணிப்பிடப்பட்டது.)

வளவன்

# தரம் 5 புலமைப் பரிசில் பயிற்சி வினாத்தாள்

## வினா இல - 04

### ஆக்கம்: செல்வி

★ **பின்வரும் சொற்களின் ஒத்த கருத்துச் சொல்லை எழுதுக**

01) எழில் ————
02) வனம் ————
03) ஞாலம் ————
04) சிலம்பு ————
05) துடி ————

★ **பின்வரும் சொற்களுக்குரிய ஆண்பாற் சொல்லை எழுதுக**

06) இடைச்சி ————
07) குயத்தி ————
08) ஆண்டாள் ————
09) அகமுடையாள் ————
10) குணவதி ————

★ **பின்வரும் சொல் வரிசையில் பொருந்தாத சொல்லைத் தெரிவு செய்து அதன் கீழ் கீறிடுக**

11) கம்பர், வள்ளுவர், ஔவையார், பாரதியார்.
12) அகத்தியர், விசுவாமித்திரர், வஷிட்டர், துரோணர்.
13) நகுலன், சகாதேவன், அபிமன்யு, அருச்சுனன், தர்மன்
14) பாஞ்சாலி, சீதை, கண்ணகி, சூர்ப்பனகை
15) இராமன், பரதன், குகன், இலக்குவன்

★ **பின்வரும் சொற்களைவைத்து இடைவெளியைநிரப்புக**

இளங்கோவடிகள், கம்பர், தம்பி, கவிச்சக்கரவர்த்தி, அடிகள்

சிலப்பதிகாரமென்னுஞ் சிறந்த காப்பியத்தைச் செய்தவர்

16) ———— இவர் சேரர் குலத்தவர் சேரன்செங்குட்டுவனுக்கு (
17) ———— ஆதலினால் இளங்கோவென்றும்; துறவொழுக்கம் பூண்டமையால்
18) ———— என்றும் அழைக்கப்பட்டார். இவருக்குப் பிற்காலத்திலிருந்தவர்
19) ————இவர். 20) ———— எனவும் பாராட்டப்பட்டவர்;

★ **பின்வரும் ஆங்கிலச் சொற்களின் தமிழ்ப் பதத்தை எழுதுக**

21) SUNFLOWER ————
22) LOUTUS ————
23) JASMINE ————
24) ROSE ————
25) LILLY ————

★ **பின்வரும் அட்டவணையை அவதானித்து கீழே தரப்பட்டுள்ள வினாக்களுக்கு விடைதருக?**

| குளிர்பான வகைகள் | கொள்ளளவு ML | விலை |
|---|---|---|
| நெல்லிரசம் | 500 | 18:50 |
| மாம்பழம் | 425 | 15.00 |
| அன்னாசி | 450 | 20 00 |
| தோடம்பழம் | 375 | 17.50 |
| விளாம்பழம் | 350 | 13.50 |

26) எந்தக் குளிர்பானம் அளவில் கூடியதாக உள்ளது?
27) கூடிய விலையுடைய குளிர்பானம் எது?
28) குளிர்பானங்களை அதன் அளவிற்கு ஏற்ப இறங்கு வரிசைப்படி ஒழுங்குபடுத்தி எழுதுக?
29) கூடிய விலையில் இருந்து குறைந்த விலை வரை குளிர் பானங்களை ஒழுங்கு படுத்தினால் நடுவில் வரும் குளிர் பானம் எது?
30) நெல்லிரசத்தைவிட எத்தனை மி. லீற்றர் குறைவாகத் தோடம்பழப்பானம் உள்ளது?

**குறிப்பு:-**

விடைகளை வேறு தாளில் எழுதி அனுப்பவும். இதற்கான விடைகளை 19-02-2001 இற்கு முன் எமக்கு கிடைக்கத்தக்கதாக அனுப்பி வைக்கவும்.

**கல்விப் பகுதி**

**வினா இல: 04**

"வலம்புரி"

இல: 15, வெள்ளாந்தெரு,

யாழ்ப்பாணம்.

மாணவர் முழுப்பெயர்; ........................

சொந்த முகவரி;; ........................

கற்கும் பாடசாலை ; ........................

மாணவர் கையொப்பம் ; ........................

இப்படிவத்தை வெட்டி உங்கள் விடைத்தாளுடன் தவறாது இணைத்து அனுப்பிவைக்கவும்.

புலமைப்பரீட்சை

## வினா இல-03 விடைகள்

01) குயில்
02) பயில்
03) யானை
04) கிளி
05) குதிரை
06) உத்தமி
07) குயத்தி
08) குறத்தி
09) மனைவி
10) விதவை
11) வச்சிரம்
12) திங்கள்
13) மா
14) செவ்வந்தி
15) ஆமை
16) வானவில்
17) புதன்
18) செவ்விந்தியர்கள்
19) மண்புழு
20) பனிக்கட்டியினால்
21) யானை
22) வானம்பாடி
23) தொலைக்காட்சி
24) வைத்தியசாலை
25) கிராமம்
26) 50 ஆரஞ்சுப்பழங்கள்
27) 301 தீக்குச்சிகள்
28) 7 கிலோசீனி
29) 100 சென்ரிமீற்றர்
30) 1000 கிராம்

## புலமைப் பரீட்சை வினா இல-03

அதிகூடிய புள்ளிகளைப் பெற்றவர்களின் பெயர் விபரம்.

★ பொ. முருகேந்திரா, சென். ஜோண் பொஸ்கோ வித்தியாலயம்.
★ த. நிலஜா, யாழ். இந்து மகளிர் ஆரபப பாடசாலை.
★ அலன்டியந்தா, சுண்டுக்குளி மகளிர் கல்லூரி.
★ பி. மிதிலா, துன்னாலை காசிநாதர் வித்தியாலயம்.
★ சி. பிரணவன், மானிப்பாய் மெமோறியல் ஆங்கிலப் பாடசாலை.
★ ம. கஸ்தூரி, மானிப்பாய் சோதி வேம்படி.
★ த. நந்தகோபி, சென். ஜோண் பொஸ்கோ வித்தியாலயம்.
★ ர. தீபனா, தேவரையாளி இந்துக் கல்லூரி.
★ க. நிரோஜினி, புனித மரியாள் வித்தியாலயம்.
★ கு. கஸ்தூரி, சாவ இந்து ஆரம்ப பாடசாலை.
★ ம. ஷாளினி, வட. இந்து மகளிர் கல்லூரி.
★ செ. பிரதீபன், யாழ். பரியோவான் கல்லூரி.
★ க. சரவணபவன், யாழ் இந்து ஆரம்ப பாடசாலை.
★ ச. பிரவீணா, கரந்தன் இராமுப் பிள்ளை வித்தியாலயம்.
★ க. துவாகரன், யாழ். இந்து ஆரம்ப பாடசாலை.
★ பு. ராஜாராம், துன்னாலை காசிநாதர் வித்தியாலயம்.
★ ச. தீபிகா, புற்றளை மகாவித்தியாலயம்.
★ நா. அனோஜினி யாழ். இந்து ஆரம்ப பாடசாலை.
★ வ. ஜனனி, யாழ். இந்து ஆரம்ப பாடசாலை
★ ச. வாசுகி, மானிப்பாய் தெற்கு மானிப்பாய்.
★ த. சுவேந்திரன், வட்டுக் கோட்டை தெற்கு.
★ ஆ. யோகினி, நீர்வேலி வடக்கு நீர்வேலி.
★ சின்னத்தம்பி லாகீசன் 2 ஆம் ஒழுங்கை ஆனைக் கோட்டை.
★ மு. குணாகரன், கோவில் கடவை, துன்னாலை.

## கல்வியில் கசப்பு ஏற்படும்

வருடா வருடம் வரும் பண்டிகைகள் திருவிழாக்கள் போல் தரம் ஐந்து மாணவர்களுக்கு புலமைப் பரிசில் பரீட்சையும் வருடா வருடம் வருகிறது. புலமைப் பரிசில் பரீட்சையைப் பொறுத்த மட்டில் அந்த வருட ஆரம்பத்திலேயே மிகுந்த பரபரப்பு அதிபர் ஆசிரியர் மாணவர்களைவிட பெற்றோருக்கு ஏற்பட்டு விடும். இந்தப் பரபரப்பு அநேகமாகச் சில வீடுகளில் ஐந்து வருடங்களுக்கு முன்பே ஏற்பட்டுவிடுகிறது.

யாழ்ப்பாணத்தைப் பொறுத்த மட்டில் பெற்றோர்கள் இப் பரீட்சைக்காக தமது ஆற்றல் விவேகம் முயற்சி என்பவற்றை அளவுக்கதிகமாக தம் பிள்ளைகள் மீது திணிக்கின்றனர் என்றே கூறவேண்டும். யாழ்ப்பாணத்துப் பிள்ளையொன்று மூன்று வயதிலேயே தனது கற்றலை ஆரம்பிக்கின்றது காலையில் ஒன்பது மணியிலிருந்து பன்னிரண்டு மணிவரையும் முன் பள்ளிக்குச் செல்கிறது. பின் வீட்டுக்கு வந்து உணவருந்திவிட்டு அயல் வீடுகளுக்கு ரியூசனுக்குச் செல்கிறது. இவ் ரியூசன் வகுப்பு பிற்பகல் மூன்று மணியிலிருந்து ஏழு மணிவரை தொடர்கிறது. பின் இரவு பெற்றோர் அலது சகோதரங்களிடம் பிள்ளை கற்கிறது.

மூன்று வயதில் தொடங்கிய இக் கற்றலானது பத்து வயது வரை தொடர்கிறது. இதனால் அப் பிள்ளையை கற்றலைத் தவிர வேறு எதையும் செய்ய பெற்றோர் அனுமதிப்பதில்லை. காலையில் பாடசாலையில் தொடங்கி இரவு பத்துமணிவரை திரும்பத் திரும்ப கற்றதையே கற்கவேண்டிய நிலை பிள்ளைக்கு ஏற்படுகிறது. இதனால் பிள்ளைக்கு கல்வியின் மீது வெறுப்புத்தான் ஏற்படுகிறது. இந்த வெறுப்பு தரம் ஐந்து புலமைப்பரிசில் பரீட்சையின் பின்பு பல மாணவர்களுக்கு கசப்பாக மாறி கல்வியை கைவிடக் கூடிய நிலையை உருவாக்கியுள்ளது.

> 'தரம் 05 புலமைப் பரிசில் பரீட்சைக்குத் தோற்றும் மாணவர்களின் பின்னடைவிற்கு பெற்றோர்களே காரணம்'
>
> கே. வி. குணசேகரம்

## பகவான் ஸ்ரீ சத்தியசாயி சேவா நிலையத்தில் சிவராத்திரி நிகழ்வுகள்

(யாழ்ப்பாணம்)

யா/பகவான் ஸ்ரீ சத்திய சாயி சேவா நிலையத்தில் சிவராத்திரி தினத்தை ஒட்டி இம்மாதம் 21 ஆம் திகதி புதன்கிழமை பி.ப. 2.30 மணி தொடக்கம் பாத பூஜை, சிவநாம பஜனை, சாயி பஜனை என்பன இடம் பெறவுள்ளன.

அத்துடன் யாழ் பல்கலைக் கழக இந்து நாகரிகத்துறை முதுநிலை விரிவுரையாளர் திருமதி நாச்சியார் செல்வநாயகம் சிவராத்திரி மகிமை எனும் பொருளில் சொற்பொழிவாற்றுவார். (உ)

## சட்டவிரோத மது வைத்திருந்த மூவருக்கு 10 ஆயிரம் ரூபா தண்டம்

(யாழ்ப்பாணம்)

சட்டவிரோதமாக மதுபானம் வைத்திருந்தமை தொடர்பாக யாழ் பொலிஸாரினால் கைது செய்யப்பட்ட மூவருக்கும், தலா 10 ஆயிரம் ரூபா தண்டப் பணமும், தலா 2 ஆயிரம் ரூபா தர்மப் பணமும் செலுத்துமாறு யாழ் நீதிமன்று திங்களன்று கட்டளை பிறப்பித்தது.

இராசாவின் தோட்டத்தைச் சேர்ந்த-நவரத்தினம் வாமதேவன், தேவராசா சூசைதாஷன், முனுஷா ஆனந்த தேவன் ஆகிய மூவர் தொடர்பாகவே நீதிமன்று மேற்படி உத்தரவைப் பிறப்பித்தது.

இதேவேளை இவர்களது தண்டப் பணத்தில் அரைவாசி பொலிஸ் வெகுமதி நிலையத்திற்கும் தர்மப் பணம் இருபாலை சானான் சிறுவர் இல்லத்திற்கு செலுத்துமாறும் உத்தரவிடப்பட்டது.

அத்துடன், இம் மூவரும் 10 ஆயிரம் ரூபா ஆட்பிணையில் செல்லவும் அனுமதிக்கப்பட்டனர். (உ-12)

## நான்குநாள் மாநாடு இன்றுடன் முடிவு

[கொழும்பு]

மேற்குலக நாட்டுத் தூதுவர்களுடனான நான்கு நாள் மாநாடு இன்றுடன் முடிவடைகிறது.

கடந்த 11 ஆம் திகதி கொழும்பில் ஆரம்பிக்கப்பட்ட இம் மாநாட்டில் நாட்டின் சமூக பொருளாதார அரசியல் முன்னேற்றங்கள் மற்றும் இலங்கையின் வெளிநாட்டுக் கொள்கைகள் குறித்து இலங்கையின் வெளிவிவகார அமைச்சர் லக்ஷ்மன் கதிர்காமர் விரிவாகப் பேசி வருகிறார். [உ-9-8]

## தடுப்புக் காவலில்இருந்த கைதி தற்கொலை

(யாழ்ப்பாணம்)

தடுப்புக்காவலில் இருந்த கைதிஒருவர் தூக்கிட்டுத் தற்கொலை செய்துள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

மொறட்டுமுல்ல என்ற இடத்தில் உள்ள பொலிஸ் நிலைய தடுப்புக்காவலில் இருந்த ஒருவரே இவ்வாறு கடந்த சனியன்று இரவு தனது ஆடையைத் தூக்குக் கயிறாகப் பயன்படுத்தி தற்கொலை செய்துள்ளார்.

இதேசமயம், கொள்ளைச் சம்பவம் ஒன்று தொடர்பாக கைது செய்யப்பட்ட மேற்படி கைதியின் மரணத்துக்கும் பொலிஸாருக்கும் இடையே நெருங்கிய தொடர்புகள் இருப்பதாக வேறுசில செய்திகள் தெரிவித்துள்ளன. (உ-7)

## இன்று ஒரு தகவல்

### இளமையில் முதிர்ந்த அறிஞன்

லாகூரில் ஒரு இலக்கிய சங்கமிருந்தது. அதன் அங்கத்தவர்கள் ''சத்தியத்தின் குரல்'' என்ற பத்திரிகையைப் பிரியமுடன் வாசிப்பவர்கள் அதன் ஆசிரியருடைய எழுத்து வன்மையில் மனம் பறி கொடுத்திருந்தார்கள் பத்திரிகையின் மேலுள்ள விருப்பத்தின் காரணமாக, பத்திரிகையின் ஆசிரியரை நேரில் காண ஆசைப்பட்டார்கள் எனவே, அவ்வாண்டு நடைபெற்றதங்கள் இலக்கிய சங்க ஆண்டு விழாவிற்கு இந்த ஆசிரியரை அழைத்தார்கள். அந்தப் பத்திரிகையின் ஆசிரியர் அரபு. உருது, பாரசீகம் ஆகியமொழிகளில் பாண்டித்தியமுடையவனாயும், கவிஞனாகவும் திகழ்ந்த ஒரு கற்றுத்தேர்ந்த சிறுவனாகும். அவன் அழைப்பினை ஏற்றுக் கொண்டான்.

கூட்டம் பிரமாண்டமானதாக இருந்தது. அக் கூட்டத்திற்கு இஸ்லாமிய மார்க்க ஞானிகளும், இலக்கிய அறிஞர்களும் ஏராளமாக வந்திருந்தனர் கவிஞர் ஹாலி, கவிஞர்இக்பால, உருது எழுத்தாளர் நஜீர் அஹ்மது போன்றோர் முன் வரிசைகளில் வீற்றிருந்தனர். பதினாறு வயது கூட ஆகாத பையன்'சத்தியத்தின் குரல்'ஆசிரியன் என்ற உரிமையோடு பேச எழுந்தான் கூட்டத்தினர் திகைத்தனர். அறிஞர்கள், பண்டிதர்கள் எல்லோரும் ஏளனப் புன்னகையை உதிர்த்தார்கள்,

அவன் 'மதத்தின் அடிப்படையான பகுத்தறிவு' என்ற பொருள் பற்றிப் பேசினான், அவனுடையபேச்சைக்கேட்ட அத்தனை அறிஞர்களும் வியந்தார்கள். போற்றினார்கள்.

கவிஞர் அல்தாப்ஹுசேன் ஹாலி ''இளந்தோள்களில் முதிர்ந்த தலை'' என்று அவனைப் புகழ்ந்துகூறினார். பள்ளிக் கூடம் சென்று என்றுமே படிக்காத அவன் பிற்காலத்தில் பாரத நாட்டின் கல்வி மந்திரியாகஇருந்தான்.

இந்தியாதேசத்தின் சுதந்திரப் போரில் முக்கிய பங்கு எடுத்துக் கொண்ட முஸ்லிம் பெரியார் மௌலானா அபுல் கலாம் ஆஸாத்தே அவர். எதனையும் நேர்மையுடன்சொல்லும் தீரர், சிறந்த கல்விமான். கவிஞர், பேச்சாளர், எழுத்தாளர். இறுதிவரை இந்தியா தேசத்தின் முன்னேற்றத்திற்காகப் பாடுபட்டவர். இவர் தொடர்ந்து ஆறு ஆண்டுகள் காங்கிரஸ் கட்சியின் தலைவராக இருந்தவரென்றால், இந்திய மக்கள் அவர் மீது வைத்திருந்த நம்பிக்கையை ஒருவாறு அறிந்து கொள்ளலாம். சிறுவயதிலேயே அறிவின் சோதியாக விளங்கிய அவர் பிற்காலத்தில் இந்தியாதேசத்தின் சோதியாக விளங்கியதில் ஆச்சரியம் இல்லையல்லவா?

நன்றி
இளமைப்பருவத்திலே

## திருமலையில் பயண அனுமதி தாமதம் பயணிகள் வரவுவீழ்ச்சி

(திருமலை)

திருமலையில் இருந்துசப்பல் மூலம் யாழ்ப்பாணம் செல்வதற்கு விண்ணப்பிக்கும் பயணிகளுக்கு படைத்தரப்பு அனுமதி வழங்குவதில் காலதாமதம் ஏற்பட்டு வருவதால் திருமலையில்இருந்து கப்பலில் வரும் பயணிகளின் எண்ணிக்கையில் பெரும் வீழ்ச்சி ஏற்பட்டுள்ளது

'சிற்றி ஒவ் றிங்கோ' கப்பலில் ஒரு தடவையில் 400 பயணிகள் பயணம் செய்வதற்கு இட வசதிகள் இருந்தபோதிலும் சுமார்200 பயணிகளுக்கு மட்டுமே அனுமதி வழங்கப்பட்டு வருகிறது.

முன்னர் பயண அனுமதிக்கு விண்ணப்பித்து பத்துத் தினங்களில் அனுமதி கிடைத்தது. ஆனால்தற்போது அது மூன்று வாரங்களுக்கு மேல் செல்வதாகவும், இவ் அனுமதி ஒரு வார காலத்துக்குள் கிடைக்குமாக இருந்தால் ஒரு தடவையில் 400 பயணிகளுக்குக் குறையாமல் பயணம் செய்ய முடியும் என்றும் திருமலை பிரதேச செயலக வட்டாரங்கள் தெரிவித்துள்ளன. (வ)

## அபி.குழுத் தலைவர்களாக 3 அமைச்சர்கள் நியமனம்

(கொழும்பு)

மத்திய மாகாண மாவட்ட அபிவிருத்திக் குழுத் தலைவர்களாக மூன்றுஅமைச்சர்களை ஜனாதிபதி நேற்று நியமித்துள்ளார்.

கண்டி, நுவரெலியா, மாத்தறை மாவட்டங்களுக்கே இவர்கள் தலைவர்களாக நியமிக்கப்பட்டுள்ளார்கள்.

கண்டி மாவட்டத்திற்கு அமைச்சர் அனுருத்த ரத்வத்தவும், மாத்தறைக்குமொன்டி கோபல்லாவவும், நுவரெலியாவுக்கு அமைச்சர் எஸ் பி. திஸநாயக்காவும் ஜனாதிபதியால்நியமிக்கப்பட்டுள்ளனர்.

இதே வேளை இம் மூன்று மாவட்டங்களுக்கும் அபிவிருத்தித் தலைவராகமத்திய மாகாண முதல் அமைச்சர் சரத் எக்கநாயக்கா நியமிக்கப்பட்டுள்ளார். (வ)

## ஆயுத இறக்குமதியில் போலி ஆவணங்கள் வர்த்தகர் விசாரணையில்

மோட்டார் ரக சுடுகலங்கள் மற்றும் வெடி பொருட்களை இறக்குமதி செய்வதற்காக போலியான வங்கி அத்தாட்சிப் பத்திரங்களை வழங்கிய கோடீஸ்வரரான வர்த்தகர் ஒருவரை இலங்கை.சி.ஐ.டி யினர் விசாரணை செய்துள்ளனர்.

சீன ஆயுத உற்பத்தியாளர் ஒருவரின் இலங்கைப் பிரதிநிதியாக இவ் வர்த்தகர் செயற்பட்டு வந்ததாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

ஆயுதங்களை இறக்குமதி செய்வதற்காக இந்த ஆயுத வர்த்தகர் இரண்டு போலி வங்கி அத்தாட்சிக் கடிதங்களைவழங்கியுள்ளார். (ந-5)

### விடுதலை

அனுமதியின்றி கள்விற்பனை செய்ததாக கூறப்படும் பிரம்படி கொக்குவிலைச் சேர்ந்த பாலையா கந்தசாமி என்பவரை நேற்று யாழ் நீதிமன்றில் ஆஜராகியபோது அந்த நபரைஎச்சரிக்கை செய்து விடுவிக்கப்பட்டுள்ளார். [வ-12]

## பாவனைக்குதவாத 10ஆயிரத்து 500 கண்ணி வெடிகள் நடுக்கடலில் கொட்டப்பட்டன

(கொழும்பு)

பாவனைக்குதவாத நிலையில் நீண்ட காலமாக ஆயுதக் களஞ்சிய சாலையின் பெருமளவு பகுதியை ஆக்கிரமித்திருந்த 2இலட்சத்து 31ஆயிரம் கிலோ எடையுள்ள கண்ணிவெடிகள் விமானப் படையினரின் உதவியுடன் கடற்படையினர் நடுக்கடலில் கொட்டியுள்ளனர்.

சுமார் 10 ஆயிரத்து 500 டாங்கி எதிர்ப்பு கண்ணி வெடிகள் இவற்றில் அடங்கும்.

மேற்படி கண்ணிவெடிகளை நடுக்கடலில் கொட்டுவதற்கான அனுமதியினை பாதுகாப்பு அமைச்சு வழங்கியிருந்தமை குறிப்பிடத்தக்கது.

இதேவேளை, மேலும் பல இராணுவத் தளபாடங்கள் பழுதடைந்த நிலையிலும், பாவனைக்கு அவசியமின்றியும் முப்படைகளினதும் களஞ்சிய சாலைகளின் பெருமளவு இடத்தைப் பிடித்திருப்பதாக கூறப்படுகிறது. (உ-6)

### அமைச்சருக்கு பிணை அனுமதி

(கொழும்பு)

நடைபெற்று முடிந்த தேர்தல் கால கொலைச் சம்பவம் தொடர்பாக கைது செய்யப்பட்ட பிரதி சுகாதார அமைச்சர் ஜானக பண்டார தென்னக்கோனை கண்டி நீதிமன்றம் 10 ஆயிரம் ரூபா பிணையில் விடுதலைசெய்துள்ளது. இவருக்கு மருத்துவ சிகிச்சை வழங்க வேண்டியிருப்பதாக அவரது சட்டத்தரணி கேட்டுக்கொண்டதையடுத்தே நீதிபதி பிரதியமைச்சரைப்பிணையில் செல்ல அனுமதி வழங்கினார். (ந-5)

### பிணையில் செல்ல அனுமதி

(யாழ்ப்பாணம்)

சட்ட விரோதமாக சாராயம் வைத்திருந்த நால் வரை 5 ஆயிரம் ரூபா ஆட் பிணையில் செல்ல நீதிமன்றம் அனுமதித்துள்ளது.

சுதுமலை வடக்கை சேர்ந்த சேனாதிராஜா யோகநாதன், பாலசிங்கம் மோகன் மற்றும் தாவடி வடக்கை சேர்ந்த வேலன் சரஸ்வதி தெல்லிப்பழையைச் சேர்ந்த நாகன் அருளன் ஆகியோரையே ஆட்பிணையில் செல்ல அனுமதிக்கப்பட்டுள்ளது.

அத்துடன் இச்சம்பவம் தொடர்பாக லோட்டஸ் வீதி வண்ணார் பண்ணை யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த சோமசுந்தரம் என்பவரை மதுவரி பரிசோதகர் ஊடாக அழைப்பாணை விடுமாறும் மன்று உத்தரவிட்டுள்ளது. (உ-12)

### அரச செலவில் அடக்கம்

(யாழ்ப்பாணம்)

சுன்னாகம் சிவன் கோவிலடிப் பகுதியில் கடந்த வெள்ளிக்கிழமை படையினரால் சுட்டுக் கொல்லப்பட்ட இனம் தெரியாத ஆணின் சடலம், மல்லாக நீதிபதியின் உத்தரவிற்கிணங்க நேற்று அரச செலவில் அடக்கம் செய்யப்பட்டது. (உ-12)

### கசிப்புவிற்றவர் பிடிபட்டார்

[ஒட்டுமடம்]

பொம்மை வெளிப்பகுதியில் கசிப்பு விற்பனையில் ஈடுபட்டதாக கருதப்படும் அப்பையா தம்பிப்பிள்ளை என்பவரை மதுவரித்திணைக்கள உதவியுடன் ஜே/88 கிராம அலுவலர் பிடித்துள்ளார். [உ-12]

## வானொலி; ரீ.விக்கு மீண்டும் அனுமதிபத்திர வரி

(கொழும்பு)

தற்போது அரசாங்கம் எதிர்நோக்கும் பொருளாதார நெருக்கடிகளினால் தொலைக்காட்சி மற்றும் வானொலிப் பெட்டிகளுக்கும் அனுமதிப்பத்திரம் வழங்கும் முறையை மீண்டும் அமுல் செய்வதற்கு அரசாங்கம்தீர்மானித்துள்ளது.

கடந்த ஆண்டு வரவு-செலவுத் திட்டத்தின் போதுஇந்த அனுமதிப் பத்திர முறையை அரசுரத்துச்செய்திருந்தது தற்பொழுது அரச ஊழியர்களுக்கு சம்பள அதிகரிப்பை வழங்க முடியாதுள்ளதினால் வானொலி மற்றும்தொலைக்காட்சி பெட்டிகளின் அனுமதிப் பத்திரம் மூலம் பெறப்படும் நிதியை இதற்காகப் பயன்படுத்தலாமென திறைசேரி அதிகாரிகளுக்கும்பொது ஜன ஐக்கிய முன்னணி பிரமுகர்களுக்கும் இடையே அண்மையில் நடை பெற்ற உயர் மட்டக் கூட்டத்தில் சுட்டிக் காட்டப்பட்டுள்ளது.

இவ்வாறு திரட்டப்படும் நிதியினால் அரச ஊழியர்களின் சம்பளத்தை 15 வீதத்தால் அதிகரிக்க உத்தேசிக்கப் பட்டுள்ளதென்றும் அதே வேளை இத் திட்டத்தின் மூலம் அதிக வருமானம் அரசுக்கு கிடைக்குமென்றும் தெரிவிக்கப்பட்டது

இதேவேளை தற் போது அறவிடப்படும் பொருட்கள் சேவைகள் வரிக்கு(ஜி எஸ்.ரி) பதிலாக மொத்த விற்பனை வரியை மீண்டும் அறிமுகம் செய்யவும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. (ந-5)

## 72 இலங்கை மீனவரை இந்தியாவிடுதலைசெய்தது

[கொழும்பு]

இந்திய கடற்பரப்பில் மீன் பிடித்தது தொடர்பாக கைது செய்யப்பட்டுத் தடுத்துவைக்கப்பட்டிருந்த 72 இலங்கை மீனவர்கள் விடுதலை செய்யப்பட்டுள்ளனர்.

பேருவளை, நீர்கொழும்பு. சிலாபம், மாருவில, காலி, தங்கால மற்றும் குடாவலப் பகுதியைச் சேர்ந்த மீனவர்களே விடுதலை பெற்று இலங்கை திரும்பியுள்ளனர்

இதேவேளை மேலும் நூறு இலங்கை மீனவர்கள் இந்தியா மாலைதீவுபோன்ற நாடுகளில் தடுத்து வைக்கப் பட்டிருப்பதும் குறிப்பிடத்தக்கது. [ந 5]

## மெய்வல்லுநர் பரீட்சை வினாத்தாளில் எண்ணற்ற பிழைகள்!

(யாழ்ப்பாணம்)

அகில இலங்கை மெய்வல்லுநர் சங்கத்தினால் நடத்தப்பட்ட மெய்வல்லுநர் பரீட்சை வினாத்தாள்களில் எண்ணிக்கை இல்லாத எழுத்துப்பிழைகளும், வசனப்பிழைகளும் இடம்பெற்றிருந்ததாகக் கல்வித்திணைக்கள உயர் அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார்.

இந்த மெய்வல்லுநர் பரீட்சை கடந்த சனிக்கிழமை யாழ் மத்தியகல்லூரியில் நடைபெற்றது.

இப் பரீட்சைக்கான வினாத்தாள் கொழும்பில் தயாரிக்கப்பட்டிருந்தது.

கேள்விகளில்எழுத்துப்பிழைகளும், வசனப் பிழைகளும், விளங்கிக் கொள்ளமுடியாத வசனங்களும் இருந்ததாக அந்த அதிகாரி மேலும் தெரிவித்துள்ளார். (வ-110)

## வலிகாம பாடசாலைகளில் பண்பற்றோர் கைவரிசை

(யாழ்ப்பாணம்)

யா/உடுவில் முருகமூர்த்தி வித்தியாலயத்தில் கடந்த வெள்ளியன்று 25 ஆயிரம் ரூபா பெறுமதி வாய்ந்த சொத்துக்கள் திருட்டுப் போயுள்ளன

பாடசாலையின் ஓட்டைப் பிரித்து உள் இறங்கிய திருடர் அங்கிருந்த தையல்இயந்திரம், சுவர்மணிக்கூடு மற்றும் பாடசாலை உபகரணங்களைத் திருடிச் சென்றுள்ளனர்.

இச்சம்பவம் தொடர்பாக பாடசாலை அதிபர் அ நடராசசுந்தரம் சுன்னாகம் பொலிஸில் முறைப்பாடு செய்துள்ளார்.

இதேவேளை, இதேபாணியிலான திருட்டுக்கள் கடந்த சில வாரங்களில் யா/கந்தரோடை தமிழ்க்கந்தையா வித்தியாலயம், யா/உடுவில் மான்ஸ் மகாவித்தியாலயம் ஆகியவற்றிலும் இடம்பெற்றிருப்பது குறிப்பிடத்தக்கது. (உ-2)

### கொடுப்பனவு

இடம் பெயர்ந்து வலி. கிழக்கு பிரதேச செயலக பிரிவில் வசித்து வருபவர்களுக்கான இரண்டாயிரம் ரூபா கொடுப்பனவு நாளை 15 ஆம் திகதி வியாழக்கிழமை மேற்படி பிரதேச செயலகத்தில் வைத்து வழங்கப்படவுள்ளது. (உ-57)

### திருடர் தொல்லை

(துன்னாலை)

கரவெட்டிப் பிரதேசத்திலுள்ள கேவளைத் தோட்ட வெளியில் அண்மைக் காலங்களில் திருடர் கைவரிசை அதிகரித்துக் காணப்படுகிறது. (கு-உ-41)

## அமெ. ராஜாங்க அமைச்சர்
# மத்திய கிழக்கு நாடுகளுக்கு விஜயம்

(வாஷிங்டன்)

அமெரிக்க ராஜாங்க அமைச்சர் கொலின்பவுல், மத்திய கிழக்கு நாடுகளுக்கான விஜயமொன்றை எதிர்வரும் 23ஆம் திகதி மேற்கொள்ளவுள்ளார்.

எகிப்து, சவுதிஅரேபியா, இஸ்ரேல், காஸா மற்றும் மேற்குக் கரைப்பகுதி குவைத் ஆகிய இடங்களுக்கு அவர் விஜயம்செய்ய உள்ளார்.

இந்தப் பிராந்தியங்களின் நிலைமைகளை அவதானிக்கவும் கருத்துக்களைப் பரிமாறவுமே அவரது விஜயம் அமைவதாக அமெரிக்க ராஜாங்க அமைச்சு வட்டாரங்கள் தெரிவித்துள்ளன. (உ-4)

# பா. ம. கட்சிக்கு 15 கோடி சொத்து

(சென்னை)

இந்தியாவில் அரசியல்இலாபங்களுக்காக பா.ம.க. பாரதிய ஜனதா கூட்டணியில் இருந்து விலகி அ.அ.தி.மு.கவுடன் புதிய கூட்டு சேர்ந்தமையால் சுமார் 15 கோடி ரூபா பெறுமதியான மூன்று சினிமாத் தியேட்டர்களும் அதைச் சுற்றி உள்ள இடமும் பா.ம.க. விற்கு இலவசமாக கிடைத்துள்ளது.

முன்பு அ.இ.அ.தி.மு.க இந்த தியேட்டர்களை விற்கும் முயற்சியில்ஈடுபட்டிருந்த போது பா.ம.க தனது கட்சி அலுவலகம் அமைக்கஅதனை வாங்க முனைந்தது.

ஆனால் அவற்றிற்கு பா.ம.க. என்ன விலை கொடுத்தாலும் ஒரு போதும் அவற்றை பா.ம.க. விற்கு கொடுக்க மாட்டார் என்று அ.இ அ.தி மு க. திட்ட வட்டமாக மறுத்திருந்தது குறிப்பிடத்தக்கது. (உ-9)

## வெள்ளை மாளிகை
# முன் துப்பாக்கிப் பிரயோகம் செய்தவர் நிலைமை கவலைக்கிடம்

(வாஷிங்டன்)

வெள்ளை மாளிகைக்கு முன்பாக துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொண்ட நபரின் நிலை மிகவும் கவலைக்கிடமாக இருப்பதாக அதிகாரிகள் கூறுகின்றனர்.

வெள்ளை மாளிகைக்கு முன்பாக துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொண்ட நபரின் காலில் சுட்டு பொலீசார் அவரைப் பிடித்தனர்.

தற்போது அவரது காலில் சத்திர சிகிச்சை மேற்கொள்ளப் பட்டு துப்பாக்கிச் சன்னம் அப்புறப்படுத்தப்பட்டுள்ளதாக முன்னர் செய்திகள் வெளியாகியமை தெரிந்ததே.

அவர் மிகவும் மோசமான நிலையில் இருப்பதாகவும் உளவியல் ரீதியாகக் கடுமையாகப் பாதிக்கப்பட்டுள்ளதாகவும் மருத்துவர்கள் கூறியிருப்பதாக தற்போது தகவல்கள் வெளியாகியுள்ளன. (உ-8)

## தொழில்நுட்பப் பூங்கா

தமிழ் நாட்டில் மிகப் பிரமாண்டமான உயர் தொழில் நுட்பப் பூங்கா மற்றும் சிறப்பு பொருளாதார வளாகம் என்பன 8 ஆயிரம் கோடி ரூபா செலவில் அமையவிருக்கின்றன. (உ-7)

## ஐவர் பலி

[சிங்கப்பூர்]

விஷம்கலந்த மதுபானத்தை அருந்திய வடகொரிய மாலுமிகள் ஐவர் மரணமடைந்துள்ளனர். (உ-9)

## செய்திப்பரல்

- யூதக் குடியேற்ற வாசி ஒருவர் சுட்டுக் கொல்லபபட்டதற்குஷரோன் கண்டனம தெரிவித்துள்ளார்.
- எதிர்க்கட்சியுடன் நடைபெறும். பேச்சுக்கள முன்னேற்றம் அடைந்து வருவதாக பர்மிய அரசு அறிவித்துள்ளது.
- இந்தியா நிலக்கரிச் சுரங்கத்தில் சிக்கியவர் ஆறு நாட்களின் பின் மீட்கப் பட்டுள்ளனர்.
- இந்தோனேஷிய ஜனாதிபதி வாஹிட்டுக்கு ஆதரவாக மீண்டும் ஒரு ஆர்ப்பாட்டம்கடந்த வியாழனன்று நடத்தப்பட்டது.
- தாய்லாந்தின் புதிய பிரதமராக ஷினாவாத்ரா தெரிவு செய்யப்பட்டுள்ளார். (உ-9)

## ஜெயகணேஷ் காலமானார்

[சென்னை]

இந்தியாவின்பிரபலதமிழ்த் திரை பட நடிகர் ஜெயகணேஷ் கடந்த 12ஆம் திகதி சென்னையில் காலமானார்.

இவர் தனது 53 ஆவது வயதில் வாயில் ஏற்பட்ட புற்றுநோயின் காரணமாக மரணமடைந்துள்ளார். (உ-9)

## விளையாட்டரங்கு வெடிவைத்து தகர்ப்பு

அமெரிக்காவின் பென்சில்வேனியா மாநிலத்தின் பீட்டஸ்பேக் நகரில் இருந்த பிரமாண்டமான விளையாட்டு அரங்கம் வெடிவைத்து தரைமட்டமாக்கப் பட்டது.

முப்பது ஆண்டு பழமை வாய்ந்த இந்த விளையாட்டு அரங்கை தகர்த்த 270 டயனமற் வெடி மருந்துக்குச்சிகள் பயன்படுத்தப்பட்டன. (செ-7)

## அமெரிக்கா செல்லத்தடை

முன்னாள் பிலிப்பைன்ஸ் ஜனாதிபதி கண்சிகிச்சைக்காக அமெரிக்கா செல்வதற்கான அனுமதியை கோரியுள்ளார்.

ஆனால் ஊழல் விசாரணைகளுக்காக அவர் நாட்டில் இருக்க வேண்டும் என காரணம் கூறி புதிய அரசாங்கம் அவரை அமெரிக்கா செல்வதற்கு தடை விதித்துள்ளது. (உ-9)

# முரணான தகவல்களைக் கூறும் வாஹிட் அவுஸ்திரேலியா பயணம்

(ஜகார்த்தா)

இந்தோனேசிய ஜனாதிபதி அப்துர்ரஹுமான் வாஹிட் அவுஸ்திரேலியாவிற்குவிஜயம் மேற்கொளப் போவதாக வந்த செய்திகள்பற்றி தனக்கு உத்தியோகபூர்வமாக எதுவும் தெரியாது என அவுஸ்திரேலிய பிரதமர் ஜோன் ஹோவன் கூறி உள்ளார்.

இது தொடர்பாக அவர் மேலும் கூறுகையில், வாஹிட்டை இந்நாடு வரவேற்கிறது. இருநாடுகளுக்கும் இடையிலான உறவு மிகவும் முக்கியமான ஒன்றாகும் என தெரிவித்தார்.

அவர் ஏப்ரல் மாதமளவில் இங்கு வரலாம் என தான் கருதுவதாகவும் அவுஸ்திரேலிய பிரதமர் மேலும் தெரிவித்துள்ளார். (உ-9)

## 95 மில்லியன்
# வயதுடைய டைனோசர் எச்சங்கள் கண்டுபிடிப்பு

(லண்டன்)

உலகில் இதுவரை அறியப்படாத தாவரஉண்ணிவகைக்குரிய 95 மில்லியன் வயதுடைய டைனோசர் எச்சங்கள மேற்கு ஆர்ஜன்ரீனாப் பகுதியில் கண்டு பிடிக்கப்பட்டுள்ளன.

மேற்கு ஆர்ஜன்ரீனாவில் நியுகு வென் மாகாணத்தில் ஆய்வுப் பணியில் ஈடுபட்டிருந்த 11 ஆய்வாளர் குழு இதனை கண்டுபிடித்துள்ளது.

புதியதொரு இனத்துக்குரிய டைனோசர் எச்சம் இதுவென்று ஆய்வாளர்கள் கருதுகின்றனர். இந்த வன் கூட்மற்கு சோரோ போடஸ் பீனித் என்று பெயர் இடப் பட்டுள்ளது

தென்னாபிரிக்க காட்டுப் பகுதியில் பல மில்லியன் ஆண்டுகளுக்கு முன்னர் வாழ்ந்த இந்த சோரோ போடஸ் தாவர உண்ணிகள் எவ்வாறு அழிந்தன என்பது ஆராயப்பட்டு வருகிறது. (உ-6)

## உலக தரிசனம்

# இந்தோனேசியாவில் மண்சரிவு பலர் மண்ணோடு மண்ணாயினர்

(ஜகார்த்தா)

இந்தோனேசியாவில் உள்ள மேற்கு யாவாப் பகுதியில் பெருமழை காரணமாக ஏற்பட்ட மண்சரிவில் 95 பேர் கொல்லப்பட்டுள்ளதாக செய்திகள் தெரிவிக்கின்றன.

இச்சம்பவத்தில ஆரம்பத்தில் 45 பேர் இறந்ததாக பொலிஸார் அறிவித்திருந்த போதும், தொடர்ந்து ஏற்பட்ட மண்சரிவில் இறந்தவர் தொகை 95 இனை தாண்டி விட்டதாக தெரியவருகிறது.

இச்சம்பவத்தில் இறந்தவர்களில் பெரும்பான்மையானோர் தங்கச்சுரங்க ஊழியர்கள் என்பது குறிப்பிடத்தக்கது (உ-9)

# பாக். சபாநாயகர் மீது ஊழல் குற்றச்சாட்டு

(இஸ்லாமாபாத்)

பாகிஸ்தானின் முன்னாள் சபாநாயகர் யுசாங் ராசாகிலனி ஊழல் குற்றச்சாட்டுகளுக்காக கடந்தசனிக்கிழமை கைது செய்யப்பட்டார்.

இவர் பாகிஸ்தானிய மக்கள கட்சியைச் சேர்ந்தவர் என்பது குறிப்பிடத்தக்கது.

339 பேருக்கு வேலை வாய்ப்பு பெற்றுக் கொடுத்ததில் லஞ்சம் பெற்றார் என்று குற்றம் சாட்டப் பட்டுள்ள போதிலும் இது குறித்து இவரது குடும்பத்தினர் எதுவித கருத்தும் கூறவில்லை.

பாகிஸ்தானில் சதிப்புரட்சி மூலம் ஜெனரல் பெர்வேஸ் முஷாரப் ஆட்சிக்கு வந்ததைத் தொடர்ந்து அங்கு செய்யப்பட்ட உயரதிகாரி கிலானி என்பதும் குறிப்பிடத்தக்கது. [உ-3]

## பூமியதிர்ச்சி தொடரும்

(புதுடில்லி)

குஜராத்தில் ஜனவரி 26 ஆம் திகதி இடம்பெற்ற பூமியதிர்ச்சி இன்னும் ஆறு மாத காலம் நீடிக்குமென விஞ்ஞான ஆய்வாளர்கள் தெரிவிக்கின்றனர். (உ-7)

# கெரில்லாக்கள் அடாவடித்தனம் 15 பேர் தீயில் கருகி மரணம்
## ஜம்முவில் சம்பவம்

(ஸ்ரீநகர்)

இந்தியாவின் ஜம்மு காஷ்மீரில் கெரில்லாக்கள், பலவீடுகள் தீக்கிரையாக்கியதோடு 15 பேர் தீயில் எரிந்து மரணமாகியுள்ளனர்.

ரஜோலியிலுள்ள கொச்சர்வால் எனும் கிராமத்தில் கெரில்லாக்கள் கண்மூடித்தனமான முறையில் தீக்கிரையாக்கி விட்டுத் தப்பிச் சென்றுள்ளனர்.

இந்திய அரசு காஷ்மீரில் யுத்த நிறுத்தம் மேற்கொண்டுள்ள போதிலும், கெரில்லாக்களின் தாக்குதல்கள் தொடர்ந்தும் இடம்பெற்று வருவது குறிப்பிடத்தக்கது. (உ-3)

# பிலிப்பைன்ஸில் மோதல் அரச படையினர்பலர் பலி

(மணிலா)

பிலிப்பைன்ஸில் கம்யூனிஸ்ட் போராளிகளுக்கும் அரச படைகளுக்குமிடையே ஏற்பட்ட மோதல்களில் 12 பேர் உயிரிழந்துள்ளனர்.

பலியானவர்களில் 11 பேர் அரச படையினர்என அறிவிக்கப்பட்டுள்ளது.

மேற்படி மோதல்சம்பவத்தில் போராளிகள் தரப்பிலும் பெரும் இழப்பு ஏற்பட்டிருப்பதாக அரசதரப்பு செய்திகள் தெரிவித்துள்ளன. (உ-9)


YOGI.HOME SCIENCE ACADEMY

குறுகிய கால புதிய வகுப்புகள்

19-02-2001 முதல்

ஆரம்பமாக உள்ளது.

★ முக ஒப்பனை, நவீன தலை அலங்காரங்கள், மணமகள் அலங்காரங்கள்.
★ இந்தியன், கண்டியன், குஜராட்டி, மடிசார் போன்று வித்தியாசமாக சாறி அணியும் முறைகள்.
★ பூக்கள் தயாரித்தல், அலங்கரித்தல், செண்டுகள் செய்தல்.
★ துணியில் வர்ண அலங்கரிப்பு.

(Fabric Paintingand Saree Painting)

ஏனைய மனையியல் வகுப்புகளும்

தொடர்ந்து நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன.

சேரவிரும்பும் மாணவிகள் உடன் தொடர்பு கொள்ளவும்.

"மேலும் சகல ஒப்பனைப் பொருட்களும் கிறீம் வகைகளும் எம்மிடம் விற்பனைக்குண்டு."

தொடர்பு: 75 அம்மன் றோட், நல்லூர், யாழ்ப்பாணம்.

(2519) [வீரமாகாளி அம்மன் கோயில் முன்பாக]

உள்ளுவதெல்லாம்
உயர்வுள்ளல் மற்றது
தள்ளினுந்தள்ளாமை நீர்த்து
- குறள்

வலம்புரி

## தடை செய்தால் வழக்கு

தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்பை பிரிட்டன் தடை செய்யுமா? தடை செய்யாதா? என்ற கேள்வியே இப்போது அரசியல் ஆய்வாளர்களின் மத்தியில் எழுந்துள்ளது. உலகிலுள்ள பயங்கரவாத அமைப்புக்களைத் தடை செய்யும் நடவடிக்கையில் பிரிட்டன் ஈடுபட்டிருக்கும் இவ் வேளையில் புலிகள் அமைப்பைத் தடை செய்வதை தமிழர்கள் எவரும் விரும்பவில்லை என்பது வெளிப்படை.

ஒரு இனத்தின் உரிமைக்காக - சுதந்திரத்திற்காகப் போராடும் அமைப்பை எவ்வகையில் பயங்கரவாத அமைப்பாகக்கருதமுடியும் என்பதே தமிழர்களின் கேள்வி.

1948களில் இலங்கைக்கு சுதந்திரத்தை வழங்கிய பிரிட்டன் தமிழர்களின் உரிமைகளையும் சிங்களப் பேரின வாதத்திடம் தாரவார்த்துக் கொடுத்ததன் விளைவையே இன்று தமிழினம் அனுபவித்துக் கொண்டிருக்கிறது. பிரிட்டன் விட்டதவறைச் செப்பனிட மண்மீட்பே ஒரே வழியென்று புறப்பட்டவர்களே விடுதலைப் புலிகள். அவ்வாறு மண் மீட்பிற்காகச் சென்று தம் உயிர் நீத்தவர்களின் எண்ணிக்கை பதினையாயிரத்தையும் கடந்து விட்டது. இப்பதினையாயிரம் போராளிகளின் மரணத்திற்கும் இன ஒழிப்பின் போது உயிரிழந்த தமிழ் போராளிகள், பொதுமக்கள் ஆகியோரின் உயிரிழப்பிற்கும் ஏதோ ஒரு வகையில் பிரிட்டனும் காரணம் என்பதை பிரிட்டன் அரசு மறந்து விடக் கூடாது.

இந்நிலையில், பிரிட்டன் தமிழர்களுக்கு இழைத்த துன்பம் கடந்த ஐம்பது வருடங்களாக நீடித்துக் கொண்டிருக்கும் வேளையில், விடுதலைப் புலிகளையும் தடை செய்யுமாயின் அவை தீராப் பழிக்கே வழியிடுமென்பதுடன், 1948ல் தமிழர்களின் உரிமையை சிங்களப் பேரினவாதத்திடம் பிரிட்டன் கையளித்ததற்கு எதிராக ஈழத்தமிழர்கள் ஒன்று சேர்ந்து சர்வதேச நீதிமன்றில் வழக்குத் தாக்கல் செய்ய வேண்டிய சூழ்நிலையும் ஏற்படலாம்.

அவ்வாறு பிரிட்டனுக்கு எதிராக வழக்குத் தாக்கல் செய்தால், பயங்கரவாத அமைப்புகளைத் தடைசெய்யும் தகுதி கூட பிரிட்டனுக்கு இல்லாமல் போகலாம்.

# புனிதமான காதலைப் புரிந்து கொள்ளாமல் மரணவாசலை நாடவைப்பது நன்றாகுமா?

ஆ. ஜென்சன் றொனால்ட்
ஈச்சமோட்டை

சர்வதேச காதலர் தினத்தையொட்டி இக் கட்டுரைபிரசுரிக்கப்படுகிறது.

காதலர் தினமென்றாலே புத்துணர்ச்சி பெறும் இளைய உள்ளங்களுக்கு ஒரு இன்பமான நாள். இது உலகளாவிய ரீதியில் மாசி மாதம் பதினான்காம் திகதி வெகு விமரிசையாக நினைவு கூறப்படுகின்றது. காதலர் தினத் தோற்றத்துக்கு பல வரலாறுகள் கூறப்பட்டு வந்தாலும், அதில் அனேகமானவர்களால் ஏற்றுக்கொள்ளப்பட்டு வரும் வரலாறு ஒன்று உள்ளது.

### நம்பப்படும் வரலாறு

பல்வேறு இடையூறுகளுக்கு மத்தியில் தம் காதலை நிறைவேற்ற முடியாது தவித்து தன்னிடம் தஞ்சமடைந்த இரு காதலர்களின் இளம் உள்ளங்களை கத்தோலிக்க ஆயரான வலன்ரைன் அடிகளார் இணைத்து வைத்த நிகழ்வை நினைவு கூருவதே இத்தினம் என நம்பப்படுகின்றது.

கத்தோலிக்க திருச்சபையினால் புனிதராக நிலைப்படுத்தப்பட்ட ஆயர் வலன்ரைனின் பெயரைக் கொண்டே இத்தினத்தை செயின்ற் வலன்ரைன்ஸ்டே (புனித வலன்ரைன் தினம்) என இது பெயர்பெற்றுள்ளது.

### களைகட்டும் நிகழ்வுகள்

இன்றைய நாளில் சர்வதேசமெல்லாமே இளைஞர் யுவதிகள் பலவேறு வழிகளில் தமது சந்தோஷங்களை வெளிப்படுத்திப் பல்வேறு நிகழ்வுகளில் ஈடுபடுவார். மேலைத்தேய கலாசாரத்தில் காதலை வித்தியாசமான ஒரு செயற்பாடாகப் பார்ப்பதில்லை.

அங்கு இளைஞர் யுவதிகளுக்குப் பூரண சுதந்திரம் அனுபவிக்கும் வாய்ப்புக்கள் அதிகமாகவேயுள்ளன. அவர்கள் தமது காதலர்களைச் சந்தித்து, மனம் விட்டுப் பேசி, பிரிந்தவர்கள் இணைந்து, தமது பொழுதுகளைச் சந்தோஷமாகக் களிப்பார்கள். மேலும் தமது அன்பைத் தெரிவித்து, வாழ்த்து மடல்கள் அனுப்புவர். ஏன்? எமது நாட்டில் கூட இந்த வாழ்த்து மடல் மூலம் அன்பைத் தெரிவித்துக்கொள்வோரும், பூங்காக்களிலும், பொதுஸ்தலங்களிலும் சந்திப்புக்களை ஏற்படுத்தி இதயமொழி பேசுவோரும் அதிகமே!

### பூக்களின் விற்பனை

இந்த ''காதலர் தினம்'' எனப்படும் புனிதநாளிலேயே உலகிலேயே கணக்கிட முடியாதளவிற்கு மலர்கள் விற்பனையாகின்றன இன்று காதலர் தினமென்றால் அதற்கு முதல் நாட்களிலிருந்தே நகரில் மலர்களின் வியாபாரம் களைகட்டிவிடும். அதாவதுவண்டுபோல் வரும் ஆண்கள், பெண்கள் கூட்டம் மலர்களை மொய்த்துக் கொள்ளும் நாள்.

இன்றைய நாளில் மலர்களில் றோஜாப்பூவுக்கு அதிக மவுசாம். ஒற்றை றோஜாப் பூக்கள் கூட நான்கு இலக்க விலைகளில் விற்கப்படுமாம். பார்த்தீர்களா காதலர் தினத்தின் சிறப்பை!

### புனித காதலர் தினம்

எம்மில் பலர் காதலர் தினத்தை அதற்குரிய அந்தஸ்துடன் பார்பதில்லை. அதை காமுகர் தினம் போல் எதிர்கொள்வதே வேதனைக்குரியது. காதல் புனிதமானது. இந்த உலகே அன்பு எனும் ஈர்ப்புக்குட்பட்டே இயங்கிக் கொண்டிருக்கின்றது.

சர்வதேச மொழி ஆங்கிலம் எனஏற்றுக்கொள்ளப்பட்டது போல், மனிதம் இதயம்மூலம் பேசும் சர்வதேச மொழி 'காதல்' என்று அனைத்து இதயங்களும் இன்று ஏற்றுக் கொண்டுள்ளன காதல் புனிதமானது அது போற்றப்பட வேண்டியது. அதற்கு உரிய இடம் உரிய முறையில் கொடுக்கப்படும்போது அதன் புனிதம் முழுமையாக உணரப்படுகின்றது.

### வரைவிலக்கணங்கள்

காதலுக்கு பலரும் பல வழிகளில் வரைவிலக்கணங்களைக் கொடுக்கின்றனர். ஆபினும் காதல் அவர்களின் வரைவிலக்கணங்களையும் கடந்து தன் புனிதத்தை அன்றுமுதல் இன்றுவரை பேணிக் கொண்டு வருகின்றது. அதனால்தான் இன்றும் கூட நாம் 'காதல்' பற்றிப் பேசுகின்றோம்.

சிரிப்பு. பசி, கோபம், தாகம், சந்தோஷம், அழுகை போன்ற எம் மனித உணர்வுகளைப் போல் காதலும் ஒரு உணர்வுதான் என்கின்றனர் சிலர்.

விஞ்ஞானிகளோ இதை விட ஒரு படி வித்தியாசமாகச் சென்று காதலென்பது உடலில் உருவாகும் ஒருவித ஓமோனின் செயற்பாட்டால் உருவாவது. என்றும் இது தொடர்ந்து நான்கு வருடங்கள் இருப்பின் படிப்படியாக குறைந்து விடும் எனக்கூறி காதலை கண்ணாடிப் போத்தலினுள் இட்டு ஆய்வுகூட மேசைக்கு கொண்டு வருகின்றனர்

'அந்த வலிகூட உன்
நகங்களால் கீறப்பட்ட
தென்றால எனக்கு
சுகமாகத்தானிருக்கும்'

எனக்கூறும் சாரருக்கு மிடையில் எப்படி காதலை வரைவிலக்கணப்படுத்த முடியும்?

### காதலின் ஆன்மீகம்

காதல் சுமையிலும் சுகமான உணர்வு மனங்கள் புரிந்து கொண்டு இறுக இணைந்து கொண்டால் காதலுக்கு முன் எந்தக் சனரக வாகனமும் பின்வாங்கித் தான் செல்ல வேண்டும்.

காதலைச் சொல்லி இணை பிரியா ஜோடிகளாக வாழ எங்களுக்கு அனுமதி இல்லையே என ஏங்கி, இரண்டு உயிர்களும் உடலை விட்டுப் போகிறதே!. இது ஒரு வகையில் பார்க்கும் போது அர்த்த மற்றதாகத் தெரிந்தாலும் இதை உண்மையான காதல் இல்லை எனக் கூறமுடியாதே! இறந்து போன அல்லது பிரிந்து போன தன் காதல் ஜோடியைநினைத்தே காலம்முழுதும் வாழ்வைக் கண்ணீரால் கரைத்துக் கொண்டிருப்பவர்களின் காதலை என்னவென்று சொல்வது?

சிட்டுக்குருவியின் சிறகுகள் வாங்கிப் பறக்கவும், நிலவை எடுத்து பொட்டிட்டுப் பார்க்கவும், பாறையை இரசிக்கவும் பார்வையில் உணர்வுகளைப் பரிமாறவும் காதலுக்குத் தானே முடிகின்றது

'வருடிச் செல்லும்
உன் நினைவுகளின்
ஒத்தடங்களே
என் இதயத்து வலிகளை
இன்பமாக்குகின்றன'

என ஆத்மாத்தமாய்ப் பேசுகின்ற சுகம் காதலுக்கு மட்டுந்தானே உண்டு

'ரணங்கள் மீது
ராகமிசைக்கவும்
சுவாசக்காற்றில்
உயிரை உணரவும் செய்வது
காதல்தானே'

'காதலென்பது, எதையும் எனக்கென சுருக்கிக் கொள்வதல்ல, நீ என்னிடமிருந்து தப்பிவிட முடியாது என உள்ளங்கையிலிட்டு உன்னை விரல்களால் இறுக மூடுவதல்ல, மாறாக, உன்னை உனது மாறாத குணத்துடனும், மாறாத சுதந்திரத்துடனும், சந்தோஷமாக வாழ

→ 2ஆம் பக்கம் பார்க்க

## கண்ணீர் விடுவாயா?

என் இனிய வாழ்வில்
இன்பப்பூக்கள தர முடியாதவளே
நான் இறந்த பின்பாவது
என் கல்லறைக்கு வருவாயா
நான் உன்னுடன் பேச வேண்டும்
அப்பொழுதாவது நீ பேசுவாயா
அல்லது கண்ணீர்ப்பூக்கள் தூவுவாயா

நான் தூங்கும் போது கூட
உன் நினைவாய் தூங்குகிறேன்
ஆனால் நீ என்னை விட்டு
என் ஜன்னல் வழியாக
குதித்து ஓடுகிறாய்
நான் உன்னை பிடிக்க நினைத்தேன்
முடியவில்லை
ஆனால் என் நிலையைப்பார்த்து
அழுதது பௌர்ணமி

அதனால் சொல்கிறேன்
ஒருவேளை நான் இறந்து விட்டால்
நிலவிடம் சொல்லிவிடு
அதற்காவது சொட்டு கண்ணீர் வரும்
எனக்காக அதில் சொட்டு விழும்

நிரோஜிகன்
மாசியப்பிட்டி. சண்டிலிப்பாய்

## நானிப்போதுஒருஏழை...?

மனிதமுள்ள மனிதர்களும்... ... ...
மறைந்து போகக் கண்டேன்
உயிர் கொடுக்கும் உடன் பிறப்பும் ... ... ...
உறங்கிப் போகக் கண்டேன்
பின் தொடர்ந்த சொந்தங்கள் ... ... ...
தூரப் போக கண்டேன்
தோள் கொடுக்கும் தோழர்கள் ... ... ...
தூற்றி விடக் கண்டேன்
எதிர் பார்த்த என்னிதயம்
எங்கே என்று ஆச்சு
காத்திருந்த கரு விழிகளில் ... ... ...
கண்ணீர் வற்றிப் போச்சு
சிந்தித்தேன் உண்மை தெளிவானது ... ... ...
நானிப்போ ஒரு ஏழை!

-வரணியூர். சி. நந்தா-

## காதலால்!

உலகம் சுழல்வதும் காதலால்
உயிரின் இருப்புமே காதலால்
கலகம் விளைவதும் காதலால்
கவிதை பிறப்பதும் காதலால்

பாலையும் பூப்பது காதலால்
பாசங்கள் துளிர்ப்பதும் காதலால்
சோலைகள் பூப்பதும் காதலால்
சோகங்கள் வருவதும் காதலால்

உணர்வுகள் இணைவதும் காதலால்
உள்ளங்கள் உயர்வதும் காதலால்
உணர்வுகள் உடைவதும் காதலால்
உன்னதம் பிறப்பதும் காதலால்

எல்லாம் நடப்பது காதலால்
என்று சொல்வதும் காதலால்
கல்லும் கசிந்திடும் காதலால்
கண்ணீர் சுவைப்பதும் காதலால்

காற்றும் பேசிடும் காதலால்
கடவுளைக் காண்பதும் காதலால்
தோற்றுப் போவதும் காதலால்
தோல்வியே வென்றிடும் காதலால்

சூரியநிலா
ஈச்சமோட்டை

சாரங்கனின்
விஷேட விலைக்கழிவு
இன்று முதல் 07/03/2001
வரை உங்கள் ஓடர்களை
முன்கூட்டியே
பதிவு செய்யுங்கள்
**சாரங்கன் நகைமாடம்**
45, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.
[கி-1478]

## கூட்டம் இன்று

(மண்டைதீவு)

தீவுப்பகுதி தெற்குபிரதேச சிறுவர் உரிமைகள் குழுக் கூட்டம் இன்று வேலணை பிரதேச செயலர் செ.இரத்தினம் தலைமையில் வேலணை பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் நடைபெறும். (ந-11)

**வ.பி.போ.ச---**

காரிஒருவர் தெரிவித்துள்ளார்.

நேற்றுஇடம்பெற்ற இக் கலந்துரையாடலில் தெல்லிப்பழை பிரதேசசெயலர், வலிவடக்கு பிரதேச சபைத் தலைவர், வடபிராந்திய போக்குவரத்துச்சபை முகாமையாளர், தெல்லிப்பளை கூட்டுறவுச் சங்கத்தினர் மற்றும்செஞ்ஜோன்ஸ் அம்புலன்ஸ் படைப் பிரிவினர் ஆகியோர் கலந்துகொண்டனர்.

இக் கலந்துரையாடலில் பின்வரும் முடிவுகள்எடுக்கப்பட்டது

★ சிவராத்திரி தினத்தன்று ஆலயத்தில்500பக்தர்களை தங்கவைக்க வசதிகளை ஏற்படுத்துதல்.

★ ஆலயச்சூழலை அண்டிய பகுதிகளில் இரவு10மணி முதல் அதிகாலை 4மணிவரை ஊரங்குச்சட்டம் அமுல் படுத்தப்பட்டிருக்கும்.

★ ஆலயச் சூழலில் சிற்றுண்டிவிற்பனை நிலையத்தை தெல்லிப்பழை பலநோக்கு கூட்டுறவுச் சங்கத்தினர் நடாத்துதல்.

★ ஆலயத்துக்கு செல்லும் பக்தர்கள் அடையாள அட்டைகளை இராணுவக்காவல் அரணில் ஒப்படைத்துவிட்டுச் செல்லுதல்.

இதேவேளை இம்முறை கீரிமலைக்குச் செல்வதற்கு சேந்தான்குழப் பாதையை திறந்துவிடலாமென்றுகருத்து தெரிவிக்கப்பட்டது. (இ-12)

# மருத்துவ வசதிகள் எதுவுமின்றி களுத்துறைசிறையில்தமிழ்கைதிகள்

## மனித உரிமை ஆணைக்குழு அதிகாரி தெரிவிப்பு

(கொழும்பு)

களுத்துறைச் சிறைச்சாலையில் தடுத்துவைக்கப்பட்டுள்ள தமிழ் அரசியல் கைதிகள் எதுவித மருத்துவ வசதிகளும் இன்றி மிகவும் கஷ்டப்படுவதாக மனித உரிமை ஆணைக்குழுவின் அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

களுத்துறைச் சிறைச்சாலையில் தடுத்து வைக்கப்பட்டுள்ள தமிழ் அரசியல் கைதிகளை நேரில் பார்வையிடச்சென்ற மனித உரிமைகள் ஆணைக்குழு அதிகாரி எஸ். சிறிதரனே இவ்வாறு தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் தகவல் தருகையில்; களுத்துறைச் சிறைச்சாலையில் வடக்குக் கிழக்குப் பகுதிகளைச் சேர்ந்த 528 தமிழ் அரசியல் கைதிகள் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர். இவர்களில் 425 பேர் சந்தேகத்தின் பேரில் தடுத்துவைக்கப்பட்டுள்ளனர்

இவர்களில் 34 பேரின் குற்றம் நிருபிக்கப்பட்ட நிலையிலும், நான்கு பேர் தடுப்புக் காவலிலும், 63 பேர் சாதாரண சட்டத்தின்கீழும் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர்.

இதே வேளை இவர்களில் இரண்டு பேர் தம்மை விடுவிக்குமாறு கோரி நீதி மன்றத்தில் மேன் முறையீடு செய்திருப்பதாகவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார். (வ)

# உலக காதலர் தினத்தில் படையினரை நேசிப்போம்

## ரூபசிங்கா வேண்டுகோள்

(கொழும்பு)

போரில் ஈடுபடும் முப்படையினரையும் மற்றும் பொலிசாரையும் உலக காதலர் தினத்தில் நாம் நேசிக்கவேண்டும். அப்போது அவர்களுக்கு உற்சாகம் ஏற்படும் இதன் மூலம் எதிரிகளை இலகுவாக வெற்றி கொள்ளும் வாய்யுக் கிட்டும்.

இவ்வாறு 'உலக காதலர் தினத்தில் படையினரை நேசிப்போம்' என்ற தொனிப் பொருளில் நடைபெறவுள்ள நிகழ்வு பற்றி விளக்கும் பத்திரிகையாளர் மாநாட்டில் தகவல் திணைக்களப் பணிப்பாளர் ஆரியரூபசிங்கா தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்;

இன்றைய தினத்தை நாம் காதலர் தினமாக மட்டும் சிந்திக்காமல் படையினருக்கு அன்பைத் தெரிவிக்கும் தினமாகக் கொண்டாட வேண்டும் இதன் மூலம் போரில் ஈடுபடாதிருக்கின்ற இளைஞர் யுவதிகள் தமது பங்களிப்பையும் போருக்கு வழங்கியவர்களாவர்.

இளைஞர் யுவதிகளின் பங்களிப்புடன் படையினர் மத்தியில் மனோபலத்தை அதிகரித்து போரிலேவெற்றிகளை ஈட்ட இத் தினத்தை நாமும் கொண்டாடுவோம் என அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

காதலர் தினத்தில் படையினரைநேசிக்கும் இவ் எழுச்சி விழா நகர அபிவிருத்தி நிர்மாணத்துறை மற்றும் பொது வசதிகள் அமைச்சின் ஆதரவுடன் நாடு தழுவிய ரீதியில் நடைபெறவுள்ளது. இதனை ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கா ஆரம்பித்துவைப்பார். (இ)

# யாழ். கே. கே. எஸ். வீதி கடையில் துணிகரதிருட்டு

(யாழ்ப்பாணம்)

யாழ். கே.கே. எஸ். வீதியிலுள்ள கடையொன்று கடந்த சனிக்கிழமை இரவு வேளை உடைக்கப்பட்டு பதினையாயிரம் ரூபாவுக்கும் மேற்பட்ட பெறுமதியுடைய பொருட்கள் களவாடப்பட்டுள்ளது.

யாழ். கே.கே. எஸ் வீதி இலக்கம் 236 இல் இயங்கும் சுதர்சினி வர்ணச் சோலையிலேயே இக்களவு இடம்பெற்றது.

இக்கடைப் பகுதிக்கு இரவு நேர பாதுகாப்புச் சேவை வழங்கப்பட்டு வருகின்ற போதிலும், களவு இடம் பெற்றுள்ளமை இப்பகுதி வர்த்தகர்களிடையே அதிர்ச்சியையும், ஆச்சரியத்தையும் ஏற்படுத்தியுள்ளது. (ந)

# மரண அறிவித்தல்

## அம்பலவாணர் பாலசிங்கம்

களபூமி சத்திரத்தையைபிறப் பிடமாகக்கொண்ட அம்பலவாணர் பாலசிங்கம் 13. 2. 2001 அன்று காலமானார்.

அன்னார் அம்பலவாணர் இலட்சுமி தம்பதிகளின் அன்பு மகனும் நல்லம்மாவின் அன்புக்கணவரும் காலம் சென்ற மாரிமுத்து வேலுப்பிள்ளை காலம் சென்ற நல்லம்மா முருகேசு [லொறிமணியம்] தம்பிஐயா [ஓய்வு பெற்ற தபாலதிபர் -கொழும்பு] சரஸ்வதி ஆகியோரின் அன்புச் சகோதரரும் காலஞ்சென்ற முருகேசு (விநாயகர் ஸ்ரோர்ஸ் நெடுங்கேணி) பாக்கியம் ஆகியோரின் அன்பு மைத்துனருமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் 14.2 2001 இன்று காலை 10 00 மணிக்கு அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று சாம்பலோடை மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்
மருமகன் - மு. நடராசா

மொந்திபுலம்,
காரைநகர். (2603)

**ரூபா . 50---**

அடிகாயங்களும் காணப்பட்டுள்ளன. இவரை விடுதலைப் புலிகளின் உறுப்பினர் என்று ஒப்புக்கொள்ளுமாறு இராணுவம் பலவந்தப் படுத்தியுள்ளது.

இது தொடர்பாக இவர் சமர்ப்பித்த அடிப்படை உரிமை மீறல் வழக்கிலேயே இவருக்கு நஷ்டஈடு வழங்குமாறு நீதிமன்றம்உத்தர விட்டுள்ளது. (ந-5)

**ஸ்ரீ செல்வா**
(யாழ்ப்பாணம்)
கார்த்திக், பிரபுதேவா
நடித்த
உள்ளம் கொள்ளை போகுதே
10-30, மட்டும் (ப. நே)
லிவிங்ஸ்டன், கரன், விவேக், வடிவேல்
நடித்த
எங்களுக்கும் காலம் வரும்
2-30 மட்டும் (ப.நே)
(புதிய வெளியீடுகள்)
(கி/1482)

**யாழ்**

உடைக்கப்பட்டு 49 லட்சம் பெறுமதியான உணவுப் பொருட்கள் களவாடப்பட்டிருந்ததும்.

அதுதொடர்பாக 37 பேர் கைதுசெய்யப்பட்டு பின்னர் விடுதலை செய்யப்பட்டிருந்தது ஏற்கனவே தெரிந்ததே.

இது தொடர்பான விசாரணைகளின் போது யாழ் செயலக களஞ்சிய காப்பாளர் இ. கதிர்காமநாதன் அளித்த சாட்சியத்தில் முரண்பாடுகள் காணப்பட்டதால் அவரை விளக்க மறியலில் வைக்குமாறு யாழ்நீதி மன்ற நீதிவான் உத்தரவிட்டிருந்தலமயும் பின்பு வவுனியா மேல் நீதிமன்றம் அவருக்கு பிணை அனுமதி வழங்கியிருந்தமையும் இங்கு குறிப்பிடத்தக்கது. (ந)

**புலிகளைத்**

தடை செய்ய வேண்டாம் என்று பத்துத் தமிழ்க் கட்சிகள் பிரதிநிதிகள் பிரிட்டிஸ் தூதரகத்தின் முதலாவது செயலாளர் அலிசன்கேம்பை சந்தித்துக் கேட்டுள்ளனர்

பிரிட்டிஸ் தூதரகத்தின் முதலாவது செயலரை பத்துத் தமிழ்க் கட்சிகளின் சார்பில் ரெலோ அமைப்பைச்சேர்ந்த என். சிறிகாந்தா அகில இலங்கைத் தமிழ் காங்கிரஸ் பொதுச் செயலாளர்கலாநிதி என். குமரகுருபரன் தமிழர் விடுதலைக் கூட்டணியைச் சேர்ந்த யாழ் நகர மேயர் என். ரவிராஜ் ஆகியோர் நேற்று மாலை சந்தித்தனர். இச் சந்திப்பு சுமார் ஒன்றரை மணிநேரம் இடம் பெற்றது.

தமிழ்த்தலைவர்களுடனான இச் சந்திப்பின்போது பிரித்தானிய தூதரகத்தின் செயலாளர் கருத்துத் தெரிவிக்கையில்;

நீங்கள் எங்களிடம் தெரிவிக்கும் விடயங்களை ஒட்டி நாம் எந்தவிதமான முடிவும் எடுக்க முடியாத நிலையில் உள்ளோம். உங்கள் கருத்துக்களையும், உங்கள் கோரிக்கைகளையும் பிரித்தானிய அரசுக்கும், உள்துறை அமைச்சருக்கும் தெரியப்படுத்துவோம்.

விடுதலைப் புலிகளைத்தடை செய்வதா? அல்லது விடுவதா? என்பதைத்தீர்மானிக்கவேண்டிய பொறுப்பு உள்நாட்டு அமைச்சரிடம் மட்டுமே உண்டு. விடுதலைப் புலிகளை பயங்கரவாத அமைப்புகளின் பட்டியலில் சேர்ப்பதும் சேர்க்காமல் விடுவதும் உள்நாட்டு அமைச்சரையும், அரசையும் பொறுத்ததாகும் என்று கூறினார்.

பிரிட்டன் தூதரகச் செயலாளருடனான சந்திப்பின் போது இலங்கையின் இன்றைய அரசியல் சூழ் நிலையையும், பிரச்சினையையும் பற்றி விவாதித்ததாக தூதுக்குழுவில் இடம்பெற்ற பிரதிநிதி ஒருவர் தெரிவித்த போதிலும் செய்திஊடகங்களுக்கு தகவல் களை வழங்க வேண்டாம் என்று தூதரக வட்டாரங்கள் கேட்டுக்கொண்டதாகவும் தெரியவருகிறது. (வ)

மங்கையர் மனங்களைக்
கொள்ளை கொள்ளும்
தங்க நகைகளைப்
பெற்றுக்கொள்ள
**நியூ நகுலா ஜுவல்லறி**
74, கஸ்தூரியார் வீதி
யாழ்ப்பாணம்.
[கி-1477]

**க பொ த---**

பிக்கப் படுமென தெரிவித்துள்ள கல்வி அமைச்சின் செயலாளர் டாக்டர் பிராடிமெல் ஏனைய கற்கை நெறிகளும் பின்னர் ஆங்கில மொழி மூலம் கற்பிக்கப் படுமெனத் தெரிவித்துள்ளார்

ஏனைய கற்கை நெறிகளிலும் பார்க்க விஞ்ஞான பாடங்கள் ஆங்கில மொழி மூலம் கற்பிப்பதற்கு போதியளவு ஆங்கில அறிவுள்ள ஆசிரியர்கள் இருப்பதனாலேயே முதலில் விஞ்ஞான பாடங்களை ஆங்கில மொழி மூலம்போதிப்பதற்கு தெரிவு செய்யப்பட்டுள்ளதென அவர் கூறினார்.

இதனை அடுத்து ஆங்கில மொழிமூல விஞ்ஞான பட்டதாரி ஆசிரியர்களை பெருமளவு உள்வாங்குவதற்கு கல்வி அமைச்சு திட்டமிட்டுள்ளதாகவும் ஆங்கில பாடநூல்களையும், ஓடியோ, வீடியோ காட்டுக்களையும் பாடசாலைகளுக்கு வழங்கத் திட்டமிட்டுள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்தார். (வ)

**யுத்தத்தை---**

யப் பட்டுள்ளது.

அடுத்த மாதம் 14ம் திகதி முதல் ஏப்ரல் மாதம் 1ம் திகதி வரை சமாதானத்துக்கான வேண்டுதல்களும் வழிபாடுகளும் நடைபெறவுள்ளது. இதன் ஒருபகுதியாக மடுமாதாவின் சொரூபம் தென்பகுதிக்கு எடுத்துச் செல்லப்படும்.

எதிர்வரும் சனிக்கிழமை நாட்டில் உள்ள சகல தேவாலயங்களிலும் விசேட திருப்பலி பூசை ஒப்புக் கொடுக்கப்படவுள்ளது.

இதேவேளை, நோர்வேயின் சமாதானமுயற்சிகளைத்தாம வரவேற்பதாகவும், இதுதொடர்பாக நோர்வே தூதுவருடன் தாம் பேச்சுக்களை நடாததஇருப்பதாகவும்ஆயர் மன்றத்தலைவர் தெரிவித்துள்ளார்.

வன்னிசென்றஆயர்கள் அதிவண இராஸப்புயேஸ் யாழ் ஆயர் அதிவணதோமஸ்சௌந்தரநாயகம் ஆகியோர் வன்னி சென்று விடுதலைப்புலிகளின் அரசியல்துறைப் பொறுப்பாளர் சு.ப. தமிழ்செல்வனுடன் பேசிவிட்டு வந்துள்ளார்கள் என்றும் இப் பேச்சுவார்த்தைக்குதாம் உதவிசெய்யதயாராக இருப்பதாகவும் தெரிவித்தார். (ம)

## ஆசிரியர் மதிப்பீட்டை ஒத்திவைக்க உத்தரவு

(யாழ்ப்பாணம்)

ஆசிரிய செயலாற்றுகை மதிப்பீட்டு சுற்றறிக்கை (இலக்கம் 20000/47)தொடர்பானமீளாய்வு இடம் பெற்றுவருவதால் இச்சுற்றறிக்கையை தற்காலிகமாக ஒத்திவைக்குமாறும் புதிய சுற்றறிக்கை விரைவில் அனுப்பப்படுமெனவும் மாகாணவலய, கோட்ட கல்விப் பணிப்பாளர்களும் மற்றும் பாடசாலை அதிபர்களுக்கும் கல்விஅமைச்சின் செயலாளர் பணிப்புரை வழங்கியுள்ளார்.

இப் பத்திரிகை ''வலம்புரி'' அன் கோ ஸ்தாபனத்தினரால் இல: 15, வெள்ளாந்தெரு, யாழ்ப்பாணம் எனும் விலாசத்தில் அமைந்துள்ள அவர்களது அச்சகத்தில்2001ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் 14ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.